குமரகுருபரன்



மலர் 13] சுபகிருது-ஸு மார்கழி-மீ 1ம்-உ (16-12-62) [இதழ்
தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

உள்ளுறை

உ

திருச்செந்திலாண்டவன் துணை

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

நாளிது மார்கழி மாதத்துடன் "குமரகுருபரன்" பதின்மூன்று ஆண்டுகள் நிரம்பி, தைத்திங்கள் முதல் தேதி பதினான்காவது ஆண்டு எய்துகிறான். தங்களுடைய அன்பும் ஆதரவும் என்றென்றும் பெருகி நிற்கப் பெரிதும் விழைகின்றான்.

சந்தாப் பாக்கியுள்ளவர்கள் பாக்கியை அனுப்புவதுடன் 1963-ம் வருடச் சந்தாவையும் சேர்த்து அனுப்பிக் "குமரகுருபரன்" வளர்ச்சிக்கு மேன்மேலும் ஊக்கமளிக்க வேண்டுகின்றேன். சந்தாப் பாக்கியில்லாத நண்பர்கள் வழக்கம்போல் 1963-ம் வருடச் சந்தாவை முன் கூட்டியே அனுப்பித் தரவும் கேட்டுக் கொள்கிறேன்.

சந்தா நம்பர் குறிப்பிட்டு எழுதுவதும், முகவரி மாற்றம் உடனுக்குடன் தெரிவிப்பதும் காலதாமதத்தை அகற்றி அலுவலகத்தின் சேவையையும் துரிதப்படுத்தும். புதுச் சந்தாதார்கள் "புதிய சந்தா" என்ற விபரம் குறிப்பிட்டு எழுதுவது நலம்.

நிர்வாக ஆசிரியர்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

"குமரகுருபரன்"

பதின்மூன்ருவது மலரின் பொருளடக்கம்

—::◁▷::—

Articles in English

உ

திருச்செந்திலாண்டவன் துணை

கட்டுரையாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

"ஸ்ரீ குமரகுருபரன்" பத்திரிகைக்குக் கட்டுரை எழுதும் அன்பர்கள், தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதியும், எழுத்துக்களைத் தெளிவாக வாசிக்கும் படியாய் எழுதியும், கட்டுரைகள் ஸ்ரீ குமரகுருபரனில் 3 அல்லது 4 பக்கங்களுக்கு மேற்படாமலும், கூடிய வரை "வளரும்" "தொடரும்" என்றில்லாமல் அவ்வவ் இதழிலேயே முடியும்படியும் எழுதி அனுப்பி வைக்க வேண்டும் - மற்றும் கட்டுரைகளை அனுப்பும் நூல் அஞ்சலில் கட்டுரை அல்லாத வேறு செய்திகளும், கடிதங்களும் எழுதி அனுப்புதல், அஞ்சல் நிலைய சட்டதிட்டங்களுக்கு முரண் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாக ஆசிரியர்.

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13 | சுபகிருதுஞு மார்கழித்திங்கள் 1-ம்வ [16-12-62] | இதழ் 12

சிதம்பரச் செய்யுட் கோவை

முதுபெரும் புலவர்

ஸ்ரீமத். சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

திருவெண்காடு.

[கட்டுரை 63]

சிவதரிசனம் பெறும் உரிமை

சிவபரஞ்சுடரை ஆன்மாக்கள் அறிந்து வழிபடற்கு முழு வுரிமை உடையன. அவ்வுடைமை ஆன்மாக்களுக்கு மட்டுமே உண்டு. ஏன்? பதி பசு பாசம் ஆகிய முப்பொருள் அன்றி வேறு எப்பொருளும் இல்லை. அம்முப்பொருளுள் முதலாகிய பதி பொதுவில் எல்லாவற்றையும் எப்போதும் இருந்தாங்கு இருந்து அறியவும் சிறப்பின் அறியவும் வல்ல பெரும்பொருள். அப்பொருள் முன் பாசம் நில்லாது. கதிரோன் முன் இருள் நில்லாது. இருளைக் கதிரோன் காணான். கதிரோனை இருள்

காணமாட்டாது. அவ்விரண்டும் பகைப்பொருள். அங்ஙனமே பாசமும் பதியும் பகைப் பொருள். ஒன்றன் முன் ஒன்று நிற்றல் இல்லை எனினும் பதி முன்னர்ப் பாசம் நில்லாது என்றலே மரபும் பொருத்தமும் ஆகும். இருள்முன் கதிரவன் நில்லான் எனல் மரபாகாது. முப்பொருளுட் பாசத்தின் நிலைமை இது. பதியைக் காண்டலில், பாசத்திற்கு ஆற்றல் இல்லாத உண்மையை இவ்வாறு அறியலாயிற்று. இனிப் பசுக்களுக்கு அப்பதியைக் காணும் உரிமையையும் ஆற்றலையும் நோக்குவோம்.

பசுக்கள் பதியைக் காணும் உரிமை உடையன. எப்படி? முப்பொருளுள் ஒருபொருள் காணமாட்டாது எனின், மற்றொரு பொருள் தானே காண்டல் கூடும்? அப்பொருள் 'பசு' என்று குறிக்கப்படும் ஆன்மாக்களே அன்றி வேறு இல்லை. பதியை அறியும் உரிமை ஆன்மாக்களுக்கே உண்டு. இவ்வுரிமையை உணர்த்துவதே சிவஞான போதத்தின் ஏழாவது சூத்திரப் பொருள்:–

பாசம் பதியைக் காணாமை

"வாக்கு மனாதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில் 'உணர்உரு ஆகிய அசத்து எல்லாம் பாழே ஆகலான், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அனுபவியாது. அசத்தாகிய பாசம் அறிவில்லாத சடம் ஆகலின், சத்தாகிய சிவத்தை அறிந்து அனுபவியாது."

இது பாசம் பதியை அறியாது என்னும் உண்மையை உணர்த்தும் பகுதி. மூன்று பொருளுள் ஒன்று காணாது என ஒன்றை விலக்கியாயிற்று. எஞ்சிய இரண்டனுள் (பதி + பசு என்பவற்றுள்), பதியைப் பசுவே காணத்தகுதியுடையது என்னும் பொருள் தானே கிடைக்கும் அன்றோ? அப்படிக் கிடைக்கும் பொருளை உணர்த்தும் முறைமைக்குரிய பிரமாணம் பாரிசேடம் (ஒழிபு,) எனப்படும்.

'ஆகலான் (-முப்பொருளுட் பாசம் பதியை அறிந்து அனுபவியாமையால்), பாரிசேட அளவையாலே; இருதிறன் அறிவுளது ஒன்று உண்டு என்பது பெறப்படுதலின், அதுவே (-அப்பசுவே) சத்தாதல் தன்மையும் அசத்தாதல் தன்மையும் ஆகிய இரண்டும் அன்றிச் சதசத்தாயுள்ள ஆன்மாவாம் என்றவாறு.

இப்பொருளை உடையஅச் சூத்திரம் ஆவது.

"யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது; அசத்து இலது அறியாது;
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா"

என்பது.

ஒன்றை அறிந்த வழி, அதனால் வரும் பயனைப் பெறுதற்குரிய முயற்சி செய்யல் உறுவார்க்கு அதனைச் சாதிக்கும் ஆற்றல் தமக்கு உண்டு என்பதும், சாதித்தால் வரும் பயன் இது என்பதும் அப்பயனை எய்துவிக்கும் சிறந்த சாதனம் இது என்பதும் அதுவரும் வழியும் உணர்ந்து மனத்தின் எழுச்சியை எய்தல் வேண்டும். அவற்றை உணர்ந்தால் அன்றி மனவெழுச்சி செல்லாது. அதனால், சாதனம் செய்து பயன் பெறுவதற்குரிய அதிகாரி ஆன்மா என்னும் உண்மையை உணர்த்துவது இச்சிவ ஞானபோத சூத்திரம். இதைச் சாதன இயலின் முதலில் வைத்த கருத்து இது. இதுவரை எழுதியவற்றின் கருத்து:- சிவபரஞ் சுடர் எங்கும் ஒளி செய்து கொண்டிருப்பது. அதைக் காணும் உரிமை 'பசு' எனப்படும் ஆன்மாக்கட்கே உண்டு. முப்பொருளுள் மற்றொரு பொருளாகிய பாசத்திற்குக் காணும் ஆற்றல் இல்லை, உரிமையும் இல்லை, இதுவே கருத்து. பதியை (ஆண்டவனை)க் காணும் உரிமை உடைய ஆன்மாக்களுள் ஒன்றும் தனக்கு உரிமை இருந்தும் ஆற்றல் இன்மையாற் திருமால் காணாமை முற்கட்டுரையில் அறியப்பட்டது. ஏனையோர் காணாமை இதில் அறிவிக்கப்படும்.

1. மறையோன் காணாமை

முத்தொழிலுள் முதற்றொழில் படைத்தல் ஆகும். அத்தொழிலை, அண்டங்களுள் ஒரு பகுதியிற் செய்வோன் அயன். அவனைப் பிரமன், நான்முகன், மலரவன் முதலிய பல பெயர்களால் குறிப்பதுண்டு. இங்கு ஆசிரியர் 'முத்தொழிலின் முதற்றொழிலோன்' என்று ஓர் அரையடி தந்தார். அவ்வடியின் பயன் என்று எண்ண, அதை அடுத்து 'முடியிழந்தான்' என்றார். முடியிழந்த வரலாறு எழுத இதில் இடம் இல்லை. அவன் ஐந்

தலையுள் ஒரு தலையை இழந்த வரலாற்றை எல்லாரும் அறிவர். இக் கலிப்பாவில் வரும் வரலாறு கந்தபுராணத்துட் காணலாம்.

பிரமன் தன் தலையொன்றிழந்தது சிவபிரானை எள்ளிய பாதகத்தால். நான்மறையும் வல்ல அம்மலரவனே, சிவபிரானை அறிந்தேத்தி அருள் பெறும் புண்ணியம் இல்லாது எள்ளிய பாதகத்தால் தன் தலையைக் கிள்ளிய துன்பம் எய்தி, அம்முழு முதலை அறியும்பேறு எய்தா தொழிந்தான் எனில், நம்மனோர்க்கு அப்பரம் பொருளை அறியும் தொழிலில் வல்லமை உண்டாமோ? அவ்வல்லமை உண்டாகப் பெற வேண்டின், அவன் அருள் ஒன்றே நமக்கு வேண்டுவது. அவனருளாலே அவன் தாள் வணங்குதல் அன்றி மற்றெதனாலே அவ்வணக்கம் வாய்க்கும்?

2 "முத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான் றனையிகழ்ந்த
அத்தொழிலிற் கெனில்தமியேம் அறிதொழிற்கும் வல்லமே."

2. மறை காணமை

நான்மறைகளும் சிவபிரான் திருவாக்கில் தோன்றியவை. அவன் திருவாயின் நின்றும் வெளிவந்த சிறப்புடையவை. ஆயினும், தம்மைத் தோற்றிய சிவபரஞ் சுடரைத் தாம் அறிய மாட்டாதன அம்மறைகள். என்வாயினின்றும் வெளிவருஞ் சொற்றொகுதி என்னை அறியமாட்டுமோ? என் வாக்கும் என் மனமும் என்னை அறிய வல்லனவோ? என்வாக்குக்கும் என் மனத்துக்கும் யான் அதீதனாக இருப்பது போல, இறைவனும் தன்வாக்கிற்கும் இருதயத்திற்கும் அதீதன். அவனுக்கு இருதயம் எத்தனையோ உள்ளன. அவை எல்லாம் தடத்த நிலையில் உள்ளவை. சொருபநிலையில் எவ்வுறுப்பும் இல்லை. அத் திருமறைகள் நான்கும் அவற்றைத் தோற்றிய முழுமுதல்வனை அறிய வல்லன அல்ல. இருக்கு வேதம் ஒன்றை மட்டும் தேடிக் காணாததாயிற்று என்பதும் மரபு. "வேதங்கள், ஐயா" என ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற நுண்ணியன்" என்பது பிரசித்தம். ஆதலின், நாலு வேதங்களும் தேடிக் காணாத உண்மையை இங்குக் கொள்ளல் பொருந்தும். அம் மறைகளால் உணரப் படாத திருவுருவண்ணத்தை நாமோ உணர்ந்தும் உன்னியும் போற்றக் கடவோம்? அதற்குரியவல்லமை நமக்கு உண்டோ?

3 "இருக்கோலம் இட்டும் இன்னும் உணராதால் எந்தைநின்
திருக்கோலம் யாம்உணர்ந்து சிந்திக்கக் கடவமே."?

3. மறைவகுத்தோன் காணுமை

'வேதவியாசர்' என்று வழங்கும் பெருமைக் குரியவர் பாரதம் இயற்றிய பண்ணவர் என்பது பலர்க்கும் தெரிந்த உண்மை. அவரை இவ்வாசிரியர் 'நான்மறைக்குந் துறை கண்டார்' என்ருர். வேதங்களை நான்காக வகுத்த காரணத்தால் 'வியாசர்' என்னும் பெயர் பெற்றவர் அவர். அதனுல்தான், "வேத வியாசர்" என்றனர் வித்தகர். 'வியாசர்' என்ற சொல்லின் பொருளைக் கேட்டறிக. இச்சிதம்பரச் செய்யுட்கோவையுள்

'ஆதி முதல்உணர்ந்தியாம் அன்புசெயப் பெற்றவா
ஓஒ பெரிதும் அரிதே எளிதேயோ
வேதம் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்
பேதுற்றும் வெஃகேம் பிற."

(13), என்றுவரும் வெண்பாவாலும், சிதம்பர மும்மணிக்கோவையுள்,

"முன்னைநான் மறையும் முறைப்பட நிறீஇய
மன்னிருஞ் சிறப்பின் வாதரா யணனும்
கையிழந் தனன்அது *பொய்மொழிந் தன்ருே, அதனுல்
தெளிவில் கேள்வியிற் சின்னூல் ஓதி
அளவா நின்னிலை அளத்தும் போலும்
அறிவும் ஆயுளும் குறையக் குறையாத
பையுள்நோய் எண்ணில படைத்துப்
பொய்யுடல் சுமக்கும் புன்மை யேமே." (17;-21-28)

என்னும் ஆசிரியப்பாவின் பிற்பகுதியாலும் இம்முனிவர் பிரானே வியாசர் வரலாற்றைக் குறித்திருத்தல் காண்க. இவற்றைக் குறித்து, ஆண்டாண்டு யாம் எழுதிய கட்டுரைகளையும் அறிக. அக்கட்டுரைகளை யெல்லாம் தனி நூலாக்கும் வாய்ப்பு, எம்பெருமானுர் சீலத்திரு. காசிவாசி அருணந்தி மாமுனிவர் திருவுள்ளத்தில் எழுங் கருணைக் கடலின் ஒருதிவலை அடியேன்மீது படும் நல்வேளையைப் பொறுத்துளது. கந்தர் கலிவெண்பா, பண்டார மும்மணிக்கோவை,

சிதம்பர மும்மணிக்கோவை, இச்சிதம்பரச் செய்யுட்கோவை ஆகிய நான் கனேயும் குறித்து எழுதிய கட்டுரைகள் ஒரு தனித் தொகுதி யாக அச்சிட்டு வழங்கப், பெறுவோமோ என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவ்வெண்ணத்தைச் சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். சிலர் எழுதியும் அறிவித்தனர். திரு வருள் கூட்டுவித்தல் வேண்டும். 'ஏழையேன் என்செய்கேன்'? என்பது திருமுறையில் வரும் ஒரு தொடர்.

வியாச முனிவர் கைதுணிந்தார். அதையே 'தோளிழந் தார்' என இதிற் குறித்தார் குமரகுருபர முனிவரர். காசியி லிருந்துணர்ந்த உண்மை அன்றோ? "வியாச முனிவர் ஒருகாலத்தில் காசியில், திருமாலே முதல்வர் என்று கூறித் தம் கையைத் தூக்க அதனைத் தூக்கியபடியே நிற்கும்படி நந்திதேவர் பணித் தனர் என்பது வரலாறு. கையை வெட்டியதாகக் கூறுவதும் உண்டு."

"ஐயிரு புராணநூல் அமலற் கோதியும்
செய்யபல் மறைகளும் தெரிந்து மாயையால்
மெய்யுறு சூள்புகல் வியாதன் நீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்."

என்ற கந்தபுராணக் கடவுள் வாழ்த்தும் ஈண்டுணரத் தக்கது. இவ்வரலாற்றைக் காஞ்சிப் புராணம் சார்ந்தாசயப்படலத்தாலும் அறியலாம்.

"பன்னூல் ஓதியும் அறியப்படாத நின்னிலையைச் சிற்ற றிவும் சில்வாழ் நாளும் உடைய யாம் சின்னூல்ஓதி அளக்க முயலும் பேதைமை" என்பது நம் தமிழ்த் தெய்வத்தின் குறிப்பு. வியாசர் தாம் சொல்லிய சொல்லின் பயனே இழந்தார் என்ன 'நா இழந்து' என்றார் ஆசிரியர். 'வாய் இழந்து அருந்தவன் மறைந்தான்' என்ற நல்லூர் விரகவியின் வாக்கு மேற்கோ ளாகக் காட்டப்பட்டது. இதன் குறிப்புரையில், ஊன் என்றது உடற்பற்றை, உய்த்துணர்வு:- 'பாசஞானத்தாலும் பசுஞானத் தாலும் பார்ப்பரிய பரம்பரனேப் பதி ஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிப்பாத நீழற்கீழ் நிற்கும்படி உதவும் பதி ஞானம். அந்தப் பதிஞானம் பெரிதும் உறவல்லமோ நாம்?

"நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார்* நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டேம் உய்த்துணர்வு பெரியமே."

4. மறைவேள்வி புரிந்தோன் காணுமை

அடிகள் என்பது கடவுள், தேவர், முனிவர், அந்தணர், பார்ப்பார்க் கெல்லாம் உரிய அருட்செல்வப் பெயர். இங்கே முழுமுதற் பொருளை உணர்த்திற்று. சிவனை மறந்து வேள்வி செய்து தீமை எய்தியவன் தக்கன். "வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாய்த்து" என்பது தமிழ்ச் சிவாகமம். தக்கன் அரும் பெருவேள்வி புரிந்தும், அடிகளை(அரனை) மறந்து செய்த பாதகத்துக்குப் பரிசிலாக ஆட்டு(மறி)த்தலையைப் பரிவின்றி உற்ருன். யாகம் புரியும் அளவு 'வேதவித்து' ஆதலின், தக்கனைக் 'கலைவல்ல மாமடிகள்' என்ருர் ஆசிரியர். 'மாமடிகள்' என்பது மாமனுர் என்னும் பொருளது. குமரகுருபரர் திருவாக்கிற்பல முறை வந்த சொல் இது. தக்கனே நம் சொக்கனை மறந்தான் ஆனுல், நாம் மறவாமையுடையம் ஆதல் எப்படி? 'வேதவித்து' ஆகிய தக்கனே வேதாந்தப் பொருளாகிய சிவனை மறந்தான் என்ருல், 'லோகவித்து' மல்லாத யாமோ அவ்வேதப் பொருளாஞ் சைவசித்தாந்த மெய்ச்சிவ சோதியை அறிந்து போற்ற மறவாமையை உடையோம்? மறவாமைக் குரிய வல்லமை நமக்கு ஏது? மறத்தலில் வல்ல தக்கனுக்கு மறித்தலையாவது வாய்த்தது. மறவாமையில் வல்ல நமக்கு மறித்தலையும் உதித்தலையும் அன்றி வேறு யாதுளது? 'தாம் அடிகள் மறந்து' என்பதை அடிகள் தாம் மறந்து எனமாற்றி அடிகளைத் தாம் மறந்து என்று விரித்துரைத்துக் கொள்க. கலைவல்லமாமடிகள் தலைகொண்டார் என்னும் பன்மைக்கேற்பத் தாம் என்ருர். யாம் அடிகளை மறவாமையுடையமோ? இங்கும் இரண்டனுருபு விரித்துரைத்துக் கொள்க.

4 "தாமடிகள் மறந்துமறித் தலைகொண்டார் கலைவல்ல
மாமடிகள் யாம்அடிகள் மறவாமை யுடையமே."

5. மறைமுதற் கலையுணர்ந்தோர் காணுமை

உலகு என்பது பெரும்பாலும் நூல் வழக்கில் உயர்ந்தோரைக் குறித்துவரும். உயர்ந்தோர் நிகழ்ச்சியைத் தான்

செய்யுள் உணர்த்தும். இழிந்தோர் வழக்கத்தை 'இழிசினர் வழக்கு' எனக்கழித்தல் நம் முன்னோர்க்குரிய இயல்பு. இழி+ஐனர்=இழிசனர் என்பது பண்டையவழக்கன்று. இக்காலத்தவர்க்கு இது முற்றும் மாருயிற்று. தொல்காப்பியர்,

5 "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான."

என்றருளினர். அதற்கு இளம்பூரணர் எழுதிய உரையை அறிவோரே அறிவோர். செய்யுள் நிகழ்ச்சி உயர்ந்தோர் வழக்கையே மேற்கொண்டியல்வது. உலகோர் பலகலைகளையும் (பயின்றுணர்ந்தும்) குலமறைகளையும் பயின்றுணர்ந்தும், அவற்றைக் கற்றதனுல் ஆய பயனைக் கொள்ளாமல், அலைகின்றனர். "ஆகம வறிவிற்குப் பயன் (இறைவனுகிய) அவன் தாளைத் தொழுது பிறவியறுத்தல்" என்ற பரிமேலழகருரையை இங்கு அறிதல் வேண்டும். இப்பயனை எய்திய கண்ணப்பநாயனுர், அவரது அப்பிறப்பில் ஒன்றும் கற்றிலாதவராயினும், அதன் முற்பிறவிகளில் எல்லாக்கலைகளையும் கற்றுணர்ந்தவர் என்பதில் ஒன்றும் ஐயுறவில்லை, அதனுற்ருன், நம் சமயாசாரியர் சுந்தரப் பெருமாள், "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்" என்று தொழுத திருவடியில் 'கலைமலிந்தசீர்' என்று சீர்மலிந்த அடை கொடுத்து, அவரே உத்தமருள் உத்தமர் என்று குறிக்க 'நம்பி' என்றும் தொழுதார். அந் நாயனுர் கலைமறைப்பயனை அடைந்தவாறு போலத் திருவடி சேராதார் எவரேயாயினும், அவர், பலகலையும் குலமறையும் பயின்றுணர்ந்தும் அவற்றின் பயனைக் கொள்ளாது அலைவோரே ஆவர். சிலகலையும் அறியாநாம் அறிவோமோ?

6 "பலகலையும் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையும் சிலகலையும் உணராதேம் உணர்துமே."

கருணையாற் காண்டல் எளிது

"அம்மநின் தன்மை எம்மனோர் உணர்தற்கு
அரிதே எளிதே ஆதல்
பெரிதே கருணை சிறியேம் மாட்டே."

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

திருவுந்தியார்-விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

[மலர் 13. இதழ் 11-ன் தொடர்ச்சி]

சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததென்(று) உந்தீபற
ஒவ்வாத(து) ஒவ்வா(து) என்(று) உந்தீபற. 25

(வி-ரை) உயிரும் அந்தக் கரணங்களும் தத்தமக்குரிய உணர்ச்சியை விடுத்துத் திருவருளுணர்ச்சியில் அடங்கி ஒன்றுபடும் பொழுதே இருவினை யொப்பு என்பது வரும். அத்தகைய் இருவினை யொப்பு வந்தாலன்றி இறைவனது திருவடியைச் சேர்தல் இயலாது என்பதாம்.

நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் பொன் விலங்கும், இருப்பு விலங்கும் போலப் பிறப்பு இறப்புக்களுக்கு ஏதுவாவனவேயாகும். இந்நிலையை அறிந்து அவ்விருவினைகளையும் ஒப்ப எண்ணி ஒருங்கு உவர்த்து விடுதலே இருவினையொப்பாகும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு அறிதற்கு அரிய நின் இயல்பு, சிறியேங்களிடத்தில், எளியதாவதன் காரணம் நின்பெருங்கருணையே ஆகும். கலை ஞானமும், மறைஞானமும், வேள்வியும், வேதப்பாகுபாட்டறிவும், ஓலமிட்டுத் தேடும் தேட்டமும், மறையறிவும் படைத்தற்றொழிலும், காமிய பூசையும் நின்னியல்பை அறியத் துணையாகா. நின்கருணையால்தான் நின்னை ஆன்மாக்கள் அறியப்பெறும். காணும் உரிமை உடையனவாயினும் காணும் ஆற்றலை நின் கருணையால்தான் அடையத் தக்கன ஆன்மாக்கள்.

(தொடரும்)

சித்து இரண்டனுள் முன்னையது உயிரையும், பின்னையது திருவருளையும் குறிக்கும். தியகரணம் குற்றத்தைக் குணமே போலக் காட்டும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. சித்திலே ஒத்தது திருவருளிலே தோய்ந்தது. ஒத்தது - இரு வினையொப்பு வரப்பெற்றது. ஒவ்வாதது - இருவினை யொப்பு வாராதது. ஒவ்வாது - இறைவனது திருவடியைக் சேராது.

சேத்தாரே கெட்டார்கரணங்கள் சேர்ந்(து) அதனோ(டு)
ஒத்தாரே யோகபரர் ஆனவர்கள்—எத்தாலும்
ஆராத அக்கரணத்(து) ஆர்ப்(பு)உண்டிங்(கு) அல்லாதார்
பேராமல் செல்வரதன் பின்''

என வரும் திருக்களிற்றுப்படியாரும் இக்கருத்தினையே விளக்கி நிற்கும்.

உள்ளும் புறம்பும் நினைப்பறின் நின்னுள்ளே
மோர்ள அமுதாம் என்(று)! உந்தீபற
முளையாது பந்தம் என்(று) உந்தீபற. 26

(வி-ரை) அகவழிபாடும், புறவழிபாடும் ஒழிந்த அகண்ட வழி பாட்டில் உலவாத இன்பம் உண்டு. அத்தகைய வழிபாடு ஆற்று வோர்க்கு இருள் சேர் இருவினையும் சேரா என்பதாம்.

புறத்தியற்றும் வழிபாட்டினைத் தாதமார்க்கம் போன்றது (சரியை) என்றும், அகத்தியற்றும் வழிபாட்டினைச் சகமார்க்கம் போன்றது (யோகம்) என்றும், அவ்விரிடத்தும் இயற்றும் வழி பாட்டினைச் சற்புத்திர மார்க்கம் போன்றது (கிரியை) என்றும், அகண்ட வழி பாட்டினைச் சன்மார்க்கம் போன்றது (ஞானம்) என்றும் கூறுவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன சங்கரனை அடையும் நன்மார்க்கங்கள் ஆகும். இவற்றின் விளக்கங்களைச் சிவஞான சித்தியார் (சுபக்கம்) 271 முதல் 274 வரையுள்ள பாடல்களாலும், 'நிலைபெறுமாறு எண்ணுதியேல்' என்றற்றொடக்கத்துத் திருமுறைகளானும் நன்கு அறியலாம்.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்என(து) என்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே."

என்னும் திருவாசகமும், பார்க்கும் இடம் எங்குமொரு நீக்கமற நிற்கின்ற பரிபூரணனந்தமே'' என்னும் திருவாக்கும் அகண்ட வழிபாட்டினை விளக்குவனவாம். ஞானமார்க்கத்தில் நின்ற மணிவாசகப் பெருமானுக்குத் திருவருள் இன்பம் முகக்க முகக்க இன்பத் தேனுய் அமிர்தமாய் நின்றது. இதனை,

"அற்புதமான அமுத தாரைகள்
ஏற்புத் துளைதொறும் ஏற்றினன் காண்க" என்றும்,

'தேனுய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்' என்றும்,

"வழங்குகின் ருய்க்(கு)உன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கினேன் வினையனேன் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்(து) உய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.''

என்றும் அப்பெருமானே அநுபவித்துச் சொல்லுதல் காண்க.

இதனை,

"உள்ளும் புறம்பும் நினைப்பொழியின் உன்னிடையே
வள்ளல் எழுந்தருளும் மாதிறேடும் — தெள்ளி
அறிந்தொழிவாய் அன்றியே அன்புடையை யாயின்
செறிந்தொழிவாய் ஏதேனும் செய்.''

என்னும் திருக்களிற்றுப் படியாரும் நன்கு விளக்கும்.

27. அவிழ இருக்கும் அறிவுடன்நின் றவர்க்கு
அவிழும்இவ் வல்லல் என்(று) உந்தீபற
அன்றி அவிழா(து) என்(று) உந்தீபற.

(வி-ரை) இறைவன் எல்லாப் பொருள்களிலும் கலந்திருப்பினும், பொருள் தன்மையால் அவற்றின் வேருகவும் விளங்கி நிற்கின்ருன். அத்தகைய இறைவனது திருவருளைத் துணையாகக் கொண்டவர்களுக்குப் பிறவித் துன்பங்கள் தோன்ரு; அத்தகைய துணையின்றேல் அவை நீங்கா என்பதாம்.

அவிழ இருக்கும் அறிவு-எல்லாப் பொருள்களிலும் பற்றற்ற நிலையில் (வேருக) இருக்கும் இறைநிலை. திருவருள் துணையினுல் அல்லது அல்லலை வெல்லல் இயலாது.

'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.'

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில."

என்னும் திருவாக்குக்களும்.

"அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்"

"குணங்கள் தாம் இல்லா இன்பமே!' உன்னைக்
குறுகினேற்(கு) இனியென்ன குறையே."

என்னும் திருவாக்குக்களும் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்துவனவாம்.

வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னார்கள் என்(று) உந்தீபற
பெறுவ(து) அங்(கு) என்பெணே உந்தீபற. 28

(வி-ரை) முத்திக்கு வித்தாக இருக்கும் திருவருளினாலே, பிறப்பு இறப்பிற்கு விளைவாக இருக்கும் பாசங்களினின்றும் நீங்கியவர்களே திருவருள் தோய்வுடையவர்கள் ஆவர். அத்தகைய பேற்றினும் பெறத்தக்க பேறு வேறு யாதுளது! ஒன்றுமில்லை என்றவாறும்.

பெண்ணே என்னும் விளி, பெணே எனநின்றது. இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறையருளின் துணைகொண்டு, இயல்பாகவே பாசங்களையுடைய உயிர்கள் ஈடேற வேண்டும் என்பதாம்.

சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்(கு) என்(று) உந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற. 29

(வி-ரை) சிவபரம் பொருளைக் கூடுகின்ற இடம் இது எனச் சொல்லுதற்கு இயலாது. ஞானசிரியனால் உணர்த்த உணரும் இடமே (ஞானமே) அப்பரம் பொருளை அடைதற்குரிய இடமாம். அங்ஙனமிருக்க அவ்விடத்தை எவ்வாற்றான் விளங்கச் சொல்ல முடியும்? முடியாது என்பதாம்.

(வளரும்)

கச்சியும் கச்சபேசமும்

திரு. ந. ரா. முருகவேள் அவர்கள்

மலர் 13- இதழ் 11-ன் தொடர்ச்சி

சென்னைக் கச்சாலீசுவரர் :

கிழக்கு இந்தியக் கம்பெனியில் 'துவிபாஷி'யாக இருந்தவர்களுள் திரு. களவாய் செட்டியார் என்பவர் ஒருவர். அவர் நாள்தோறும் கச்சிக் கச்சபேசரை வழிபடும் நியமம் பூண்டிருந்தவர். தமது அலுவல் நிலைமைகளால் அது தடைப்படவே, அவர் பெரிதும் வருந்தினர். இறைவன் அவர்தம் கனவில் தோன்றி, 'நீ சென்னையிலேயே எமக்கு ஒரு கோயில் அமைத்து வழிபடலாம்' என்று பணித்தனர். அதன்படி திரு. களவாய் செட்டியார் அவர்கள் அமைத்த திருக்கோயில்தான் இது. அதனாலேயே இதற்குக் கச்சாலீசுவரர் கோயில் எனப் பெயர் வழங்குவதாயிற்று. எங்கே இருந்து நாம் நினைத்தாலும் இறைவன் நமக்கு அங்கே வந்து அருள்புரியும் தன்மையுடையவராக விளங்குகின்றார்.

"எங்கேனும் இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கேவந் தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கேஎன் வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே".

"எங்கேனும், யாதாகிப் பிறந்திடினும், தன்னடியார்க்
கிங்கேஎன் றருள்புரியும் எம்பெருமான், எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையும்
சங்கேஒத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே."

எனத் தேவார ஆசிரியர்கள் அருளிச் செய்தபடி, அன்பர் ஒருவரின் பொருட்டுக் காஞ்சிபுரத்துக் கச்சாலை ஈசுவரர், சென்னைக்கு எழுந்தருளி நம்மனோர்க்கும் அருள்புரிந்து வருகின்றார். ஓரிடத்திலிருந்து பெயர்ந்து செல்வோர், தாம் புதிது

சென்னை "சித்தாந்த" ஆசிரியர் அவர்கள் அநுமதி பெற்று வெளியிடப் பெற்றுள்ளது.

சென்று வாழத் தலைப்படும் இடத்தும், தம் முன்னையிடத்தின் பழக்க வழக்கங்களையும் பிறவற்றையும் விடாமல் உடன் கொணர்ந்து நிலைபெறுத்துவர், இதனை ஆங்கிலத்தில் 'Colonial preservation'. என்பர். அம்முறையில் சென்னையில் அமைந் தனவே இக்கச்சாலீசுவரர், ஏகாம்பரேசுவரர், அருணாசலேசுரர், காளத்தி ஈசுரர் பெயர்களால் அமைக்கப் பெற்றுள்ள சென்னைக் கோயில்கள் ஆகும்.

கதையும் கருத்தும்:

கச்சபேசத்தில் துர்க்கை, சாத்தான், சூரியன், வயிரவர், விநாயகர் ஆகிய ஐவரும் கூட இறைவனை வழிபட்டு, அருள் பெற்றுச் சிறப்புற்றனர். கச்சிக் கச்ச பேசத்திற் போலவே, திருக்கச்சூர் என்னும் தலத்திலும் திருமால் சிவபிரானை ஆமை வடிவில் வழிபட்டார். திருக்கச்சூர், இறைவன் சுந்தரர் பொருட்டுப் பிச்சை ஏற்று உணவளித்தத் தலம். அங்குள்ள கோயிலுக்கு 'ஆலக்கோயில்' என்றும் இறைவனுக்கு 'மலைமேல் மருந்தீசர்' என்றும் பெயர். தலபுராணக் கதைகள் இக்காலத் தில் ஒரு சிலருக்குப் புறக்கணிக்கத் தக்கன போலத் தோன்ற லாம். எனினும் இத்தகைய கதைகள் எத்துணையோ பல நூற் றுண்டுகளாக நம் முன்னோர்களாற் சொல்லவும், கேட்கவும், சுவைக்கவும் பெற்று வழங்கி வருவன. இலக்கியம் வரலாறு சமுதாயம் பண்பாடு முதலிய துறைகளில் இன்னோரன்ன கதை கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. அவைகளை ஏற்ற பெற்றி போற்றுதல் நமக்குக் கடமையாகும்.[1]

இத்தல வரலாற்றுக் கதையில் வரும் திருமால், மால் (மயக்கம்) கொண்டு உலவும் நம்மை ஒத்த உயிர்களையே குறிப்

---

[1] "Indian mythology is richer, vaster, very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these bright dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them···Many of the problems of human life have a permanence and a touch of eternity about them, and hence the abiding interest in these ancient books......We can admire them and they become part of our mental heritage."

JAWAHARLAL NEHRU.

பதாகக் கொள்ளலாம். அவர்தம் ஆமை வடிவம் அறியாமையில் அழுந்தி வருந்தும் உயிர்களாகிய நம் இயல்பினைச் சுட்டுகின்ற தெனலாம். ஆமையின் கால்கள் நான்கும், தலை ஒன்றும் ஆகிய ஐந்தும், உயிர்களின் ஐம்பொறிகளை யுணர்த்தும். ஆமை நீரும், நிலமும் ஆகிய ஈரிடத்தும் உலவும் தன்மையுடையது. உயிர்கள் நல்லதனோடும் தீயதனோடும் தொடர்பு கொள்ளும் தன்மையினை, இது குறிக்கின்றது. ஆமையின் மந்தகதி, உயிர்களின் தெளி வற்ற மந்தத் தன்மையினைப் புலப்படுத்தும். திருநாவுக்கரசர் தம்மை ஓர் ஆமையின் நிலைக்கு ஒப்பிட்டுக் கொள்ளுகின்றார்:

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றேன் என் செய்வான் தோன்றினேனே"

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். முதலில் இன்பம் போலத் தோன்றி மயக்கிப் பின்னர்ப் பெருந்துன்பத்தில் அழுத்தி வருத் தும் உலகியல் நுகர்ச்சிகளில் உழலும் உயிர்களின் தன்மைக்கு உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரின் இளஞ்சூட்டினை, முதலில் மகிழ்ந்து பின்னர்ச் சூடு ஏறஏறத் தாங்கொணாது பெரிதும் தளர்ந்து வருந்திமாயும் ஆமையினுடைய தெளிவின்மையினை, நாவுக்கரசர் உவமை கூறியிருத்தல் நனி மிகப் பொருந்துவ தாகும். இஃது உயிர்களாகிய நம்மனோரின் அறியாமை நிலைக்கு ஏற்ற எடுத்துக் காட்டு. நாலடியார் (331) செய்யுளிலும் இக் கருத்து வந்துள்ளது. இனி, மெய்யுணர்வு எய்தத்தக்க உயிர் களின் மேதகு நிலைக்கும் ஆமையையே ஏற்ற உவமையாக,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

எனவரும் திருக்குறளில், ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருக்கும் திறம் அறிந்தின்புறற் பாலது.

முடிவுரை:

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நாம் அனைவரும் உய்வதற்குச் சுந்தராம்பிகை சமேத கச்சாலீசுவரப் பெருமான் திருவருள், நமக் குத் துணைபுரிவதாக!

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

★

[புதிய மலிவுப் பதிப்பு — 1961]

புதிய பதிப்பு பிரதி ஒன்றின் விலை ரு. 3–50 ந. பை. ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(முந்தின பதிப்பு பிரதி ஒன்றின் விலை. ரு. 6/–)

(தபால் கட்டணம் வேறு)

768 பக்கங்கள் கொண்டது. (128 + 621 + 19) உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி, முதலியவற்றுடன் கூடியது.

ஒரே சமயத்தில் 5 பிரதிகளும் அதற்குமேலும் வாங்குபவர்களுக்கும் 20% கழிவு உண்டு.

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தைச் சாரும்.

கிடைக்குமிடம்:–

ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர்
ஸ்ரீவைகுண்டம் P. O. :: (திருநெல்வேலி மாவட்டம்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13, இதழ் 11-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

SAMBANDAR, whose works we have been studying, had a friend older than himself, named Appar, or Tirunavukkarasu, belonging to that Vellala caste which to this day makes a very solid element in the population of the Tamil country. Left an orphan at an early age, Appar was brought up by a loving elder sister as a pious devotee of Siva. Great was the sister's grief when Appar forsook the faith of his fathers and became a religious teacher among the Jains. But her earnest prayers at last prevailed, and Appar not only came back to Saivism himself, but was the means of reconverting to Saivism the king of his country. His full name was Tirunavukkarasu, or 'King of the Tongue', but his young friend Sambandar called him Appar, or Father, and the name stuck to him. He too wandered throughout the Tamil country, sometimes alone, sometimes in company with Sambandar, singing his way from shrine to shrine. Pictures show him holding in his hand a little tool for scraping grass, with which he used to scrape the stones of the temple courts. The Jains persecuted him, and many stories tell of his miraculous escapes from their hands.

His hymns show a truly religious nature, with a deep-rooted sense of sin and need, and an exalted joy in God. There is real critical acumen in the old epigram which represents Siva as appraising the three great writers of the Devaram, or Saivite hymn book :— "Sambandar praised himself; Sundarar praised Me for pelf; My Appar praised Me Myself"

25. திருவினாள்கொழுநனுந்திசைமுகமுடையகோவும்
இருவருமெழுந்தும்வீழ்ந்துமிணையடிகாணமாட்டார்
ஒருவனேயெம்பிரானேயுன்றிருப்பாதங்காண்பான்
அருவனேயருளவேண்டுமதிகைவீரட்டனாரே.

God the essentially unsearchable, in His grace will reveal Himself to men. (See the first of the legends told in the Introduction.) Athihai Virattanam, in the South Arcot District, is the shrine here commemorated

25. Vishnu, spouse of Lakshmi, and four-ways-facing
Brahm,
Searched the heights and depths, but Thy feet
could never see.
Yet, O only Lord, who in Athihai dost dwell,
Formless, in Thy grace, grant the sight of
them to me.

— (To be Continued)

Reproduced with the kind permission of Oxford University Press. Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

மெய்ப்பொருள் நாயனர்

திரு. சி. முனிரத்தினம் அவர்கள்,
புலவர் இறுதி நிலை, சி. பா. சு. தமிழ்க் கல்லூரி,
ம யி ல ம்.

[மலர் 13. இதழ் 9-ன் தொடர்ச்சி]

(வேறு)

16. முன்வெளுத்துப் பின்பசந்த முற்றியநெல் மணிகளாய்
பொன்வெளுத்த தென்பதான பூமிசாய்ந்த சொல்லெலாம்†
தன்வெளுத்த உள்ளமெல்லாந் தானெடுத்துக் காட்டவே
மன்வெளுத்த வெற்புமல்லால் மாமலையாய்க் குவிந்தவே.

17. பொன்னினன்ன பன்னெலெல்லாம் பொதிபொதியாய்ப் பள்ளர்
பொன்னினன்ன மின்னுகின்ற புக்ககத்தி லடைத்துமே [கள்
பொன்னினன்ன அந்தணர்க்கும் புண்ணியர்க்கும் புதியராம்‡
பொன்னினன்ன சென்னெலெல்லாம் புனலைப்போல வழங்குவார்

18 பெண்ணையாலே வண்ணமாக பெருமைபெற்று விளங்கிடும்
பண்ணையாலே திண்ணமாகப் பலவளமும் பெறுவதால்
செண்டையாலே§ மண்டியார்த்து சேயிழைகள் தன்னெடும்
தண்டையாலே|| விண்டபள்ளர் தழுவியின்பங் கூருவார்.

19. வானநாடும் மண்ணிலுள்ள வளவநாடுஞ் சேரமான்
கானநாடுங் கன்னியாண்ட கனகநாடும் மற்றுமோர்
ஏனநாடும்¶ எந்தநாடும் எடுத்தளக்க ஒக்குமோ
தானநாடுந் தன்னிடத்தே தழைத்திடுநல் மேன்மையால்

---

† நெல் ‡ விருந்தினர் § இசைக்கருவிகளில் ஒன்று.
|| காலணிகலன் ¶ சாளுக்கிய நாடு

(வேறு)

20. எடுத்த விண்ணகர* மெல்லா மித்தகு
பிணுகியி** னிருபாற் கரையிற்
படுத்த பேரணையாய் மாலோன் பற்றி
யுறைவதே திருக்கோ வலூர்க்
கடுத்த பேர்வயிந்தி யூராம் தண்ட
னருளுரை வதிகை நகராம்
மடுத்த மாநகராம் தில்லை மன்னு
மருகனுரை மலையமா னுடே.

21. தடுத்தாட் கொண்டான் வெண்ணை நல்லூர்
தண்டளி வாழ்வான் சுந்தரனை
எடுத்தாட் கொண்டான் நாவலூர் தன்னில்
எதிரி யால்கன் மீதரசை‡
விடுத்தாட் கொண்டான் தேம்புலி யூரில்
விருத்த மாதொண்டர்க் கொருகால்
எடுத்தாட் கொண்டான் தில்லை வாழெம்
பெருமான் தேசுமிகு தெய்வநாடே

நகரச் சிறப்பு.

22. கருணாகரக் குகமுனி யென்பா னருமறை
யோதிச் சிறக்கவே யதனுல்
கருணாகரன் மகவாங் கந்தன் கைலையி
லிருந்து கைவேல் விடுத்தது
கருணாகரப் பதியி லூன்றவே திருக்கை
யில்வே லூரா குமாலக்
கருணாகரக் கடவுளாங் காவல னுரைக்
கந்தர் வநா டன்னதே.

23. அவ்வையார் பாடலுக் கன்ரு னெயுந்
தயிரும் பாலும் மல்கிச்
செவ்வையா யோடி வந்து சேயிழை
மணவி ருந்தில் மன்னன்

---

* கோயில் ** பெண்ணை நதி ‡ திருநாவுக்கரசர்.

தெவ்வரா மூவர் மக்கட் டேவருங்
களிக்கச் செய்த பெண்ணை
பௌவமாங் கொழுநன் ஞேக்கிப் பாயு
மரண் சூழு நகரே.

(வேறு)

24. ஊழிலா யரண்கள் நான்கும் உருப்பெறத் தோன்றுங் கங்கைச்
சூழிவாழ்க் குன்றம் போலச் சூழ்ந்திடு புரிசை முன்னே
ஆழிபோ லாறடுத் தகழியு மரணு மிளையு மன்னன்
வாழியே வாழி யென்று வாழ்த்திடு கோவல் நகர்தான்.

25. அந்தண ரிருக்கை மல்கு மணிபெரு மறுகு மரசப்
பந்தண மிகவே கொண்ட பான்மையற் றெருவும் வணிகத்
தொந்தியர் வதியும் வீதித் தொண்டரா முழுவர் வீதி
கந்தவீச் சூடுங் கன்னிக் கணிகையர் மறுகு முளவே.

26. இத்தகு தெருவி னிருபா லெழில்மிகும் இல்லந் தோறும்
முத்துவு மணியு ரத்னம் முட்டுவான் மாடந் தன்னில்
பத்தியாய் நிரைய தாக்கிப் பல்கதிர்ப் பரப்ப அதனுல்
மெத்தவே விளங்கும் மறுகின் மேன்மைதா னுரைத்தற் பாற்றே.

27. ஐயனு மரியி னடியா ரருள்பெற மூவர் முன்னுள்
வையமு மன்புந் திருவும் வாக்கினுற் றகளிக் கொண்டு
நெய்யருள் பாசத் திரியால் நேர்தமிழ் விளக்கம் காட்ட
துய்யநற் சோதிச் சுடர்வந் துற்றதிக் கோவல் நகரே.

28. திருவளர் நகரா மங்குப் பெருவளம் பெறவே யாண்டும்
கருவுரு மாலு மல்லால் வருமுறைக் குடிகள் போற்றும்
உருவள ரட்ட மூர்த்தி யுடனுரை யம்மை காக்க
மருவியே வாழும் மக்கள் மாண்புதா னுரைத்தற் பாற்றே.

(தொடரும்)

கல்வியெனும் செல்வம்

திரு. து. சுப்பிரமணியன் அவர்கள்,
அபினிமங்கலம்.

கல் தோன்றி மண் தோன்ரு நாள் தொட்டு இறைவன் இவ் உலகினில் உயிரினங்களேப் படைத்தான். அவற்றைப் பல் வேறு கோணங்களில் ஆட்டுவிக்கின்ருன். இதில் பறப்பன என்றும்; ஊர்வன என்றும்; நடப்பன என்றும்; இன்னும் பல் நிலேகளில் படைத்துள்ளான். இவற்றில் எல்லா வற்றைக் காட்டிலும் எண்ணற் கரிய இயல்பு பெற்ற உயிரினமாக மனிதனே அமைத்தது தான் விந்தையினும் விந்தையாம்.!

எல்லா உயிரினங்களுக்கும் ஐந்தறிவு கொடுத்த இறைவன், மனித இனத்திற்குமட்டும் ஐம்புலனுல் அறிந்தவற்றைச் சிந் திக்கும் அறிவாகியப் பகுத்தறிவைப் படைத்தான். எனவே இன்று மனிதன் மேம்பட்டவனுக, உயர்ந்தவனுக, எல்லா உயிரினங்களேயும் அடக்கியாளும் திறமை பெற்றவனுக உலகில் திகழ்கின்ருன்.

இவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் மேலாகத் தலே சிறந்து விளங்கும் மனிதன் தன் பகுத்தறிவின் திறத்தால் எல்லா வசதிகளேயும் அமைத்துக் கொண்டான். இப்பகுத்தறிவால் புதியதொரு சக்திதனே உருவாக்கும் அளவிற்கு அறிவியல் துறையிலே வளர்ந்துள்ளான்.

இவற்றை யெல்லாம் நோக்குமிடத்து அப்பகுத்தறிவை வளர்த்துக் கொள்ள ஏதுவாக ஒரு துணே இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே கல்வி அத்துணேயாக நின்று அறிவைப் பெருக்கி ஆற்றலே அளித்து மனிதனேச் செயல் படுத்துகின்றது.

இம்முறை நின்றுதவும் கல்வியைப்பெருஞ் செல்வங்களுள் தலேயாய தாகக் கொண்டுள்ளார்கள். இத்துணேச் சிறப்பு

வாய்ந்த கல்வி மற்றச் செல்வங்களைப் போல் அழியும் தன்மை உள்ளதன்று. எக்காலத்தும் மனிதன் புகழ் விளங்கும்படி செய்யும். பொன்னும், மணியும் மற்றுப்பிற செல்வங்களும் கல்வியினும் சிறந்தவை அல்லவென்பதைக்

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

என்று தெய்வப் புலவர் கூறியுள்ளார்.

இதனையே, அதாவது கல்வியே சிறந்த செல்வம் என்றும், மனித இனத்திற்கு அழகு கல்வியே யன்றி மற்றச் செயற்கை யழகுகள் அழகல்லவென்று நாலடியாரில்

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல — நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையே குமரகுருபர சுவாமிகள் தம் நீதிநெறி விளக்கத்தில்

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்"........

என்று கூறியுள்ளார்.

இத்தனை சிறப்புவாய்ந்த இக்கல்விச் செல்வமானது திருடர்களுக்கும், வலியர்களுக்கும், மற்றும் அழிக்கவல்ல சக்திகட்கெல்லாம் அகப்படாத சக்தி வாய்ந்தது. தோண்டத் தோண்டக் குறைவராது வளரும் தன்மை வாய்ந்தது. இங்ஙனம் பெருமை வாய்ந்த கல்வி முதற் பிறப்பில் கற்பின் ஏழ்பிறப்பும் பயன்தரும்; தவறாது துணை நிற்குமென்பதை,

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

எனக் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவனார்.

இப்படி மேம்பாடடைந்த கல்வியைக் கல்லாதார் உலகில் உயிர் வாழத் தகுதியற்றவர்களென்றும், அவர்கள் கண் இருந்தும் குருடர்களாவர் என்றும் கூறுகிறுர்.

"கண்ணுடைய ரென்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

எனவே கல்வியின் சிறப்பு, அவசியம், தன்மை யென்பன தெள்ளத் தெளிய விளங்குகின்றன.

இவ்வாறு சிறப்பு வாய்ந்த கல்வியைக் கற்க நாம் பொருள் இல்லார் உள்ளோர் முன்னின்று பொருள் கேட்பது போலக் கற்க வேண்டும். அஃதாவது உடையார் முன் இல்லார் போல்......கற்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்ருர் தெய்வப்புலவர்.

இம்மாபெரும் மாட்சிமை பொருந்திய கல்வியைக் கற்றவர்கள்; அதன்வழி நின்று; கூறும் வழிச்செல்ல வேண்டும். "செய்வன திருந்தச் செய்" என்னும் மொழிக்கேற்பக், கற்று, அதன் வழி நிற்கவேண்டும். இதைத் திருவள்ளுவனுர் கூறுமிடத்து

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

என்று அறிவுறுத்து கின்ருர்.

ஆகவே இவ்வாறு நாம் கற்ற கல்வியை "தாமின்புறுவதுலகின் புறக்கண்டு"......மகிழ்வோமாக.

அம்பலவாணரின் ஆனந்தக் கூத்து

சைவப் புலவர், பண்டித,
திரு. அ. சிவசுப்பிரமணியபிள்ளை அவர்கள்
நாகர்கோயில்.

உலகம் இறைவனை முதலாகவுடையது. அவ்விறைவன் உலகையும் அதிலுள்ள பொருள்கள் அனைத்தையும், படைத்துக் காத்து, துடைத்துத் மறைத்து அருளி வருகின்றான். அவனால் உலகமும் அதிலுள்ள அனைத்துயிரும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் இறைவனும் இயங்கிக் கொண்டிருக்கின்றான். அதனாலே எல்லாமே இயங்குகின்றன. தற்கால விஞ்ஞானிகள் அணுவினைப் பிளந்து ஆராய்ச்சி செய்தார்கள். அப்போது அவர்கள் கண்டு பிடித்த உண்மை யென்னவென்றால் அணுக்களெல்லாம் ஏக தாளத்தில் ஆடிக் கொண்டிருக்கின்றன என்று அறிந்தார்கள். அதற்குரிய காரணம் என்னவென்று ஆராய்ந்து முடிவு தெரியாமல் இருந்தார்கள். நடராசப் பெருமானின் திருக்கூத்து இதற்குத் தகுந்த காரணமாகும். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்களை இயக்குகின்ற ஆண்டவனும் நடனமாடும் மூர்த்தியாக இருப்பதில் வியப்பில்லையே. அதனாலேயே கூத்தப்பெருமான் உருவமும்நடனமாடும் உருவமாகவே விளங்குகிறது. மக்களும் துன்பம் நீங்கி இன்பம் அடையவே விரும்புகிறார்கள். நாம் ஆனந்தமடைய ஆனந்த மூர்த்தியை வணங்குவதே தக்கது. செல்வம் உடையவனே பிறர் கேட்கின்றபோது கொடுக்கமுடியும். அது போல் ஆனந்தத்தைப்பெற விரும்பும் ஆன்மாக்களுக்கு ஆனந்தம் தரத்தக்கவர் ஆனந்தக் கூத்தரேயாவர்.

அம்பலவாணரின் கூத்து விளக்கும் கருத்தைப் பார்ப்போம். கூத்து இரண்டு வகைப்படும். அவை ஒன்று ஊன நடனம், மற்றொன்று ஞானநடனம். இவற்றுள் உயிர்களுக்குப் பிறப்பை விளையச் செய்து உயிர்களைப் பக்குவப்படுத்துவது ஊன நடனமாகும். இதனையே மணிவாசகப் பெருமானும் “ஊனநாடகம்

ஆடுவித்தவா உருகி நானுனைப் பருகவைத்தவா ஞானநாடகம் ஆடுவித்தவா நையவையகத் துடைய விச்சையே" என்று அருளியிருப்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். இன்னும் ஊன நாடகத்தைப்பற்றித் திருவருட்பயன் அருளிய உமாபதி தேவநாயனுர் "மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ மேலாசி மிளாவிடின் என்று கூறியிருக்கிருர். இது நகரத்தை முதலாக வுடைய தூல பஞ்சாக்கரம் ஆகும். ஞானநடனமாவது வீட்டினை உதவும். இதனை அப்பர் பெருமான் "இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல் மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே" என்றும் "சாட எடுத்ததும் தக்கன் வேள்வியிற் சந்திரனை விட எடுத்ததும் காலனை நாரணன் நான்முகன் தேடஎடுத்தது" இவ் தூக்கிய திருவடியே யாகும் என்பதை நமக்கு அருளியுள்ளார். இதனைத் திருவருட் பயனில் "சிவமுதலே யாமாறு சேருமேற் றிரும் பவமிது நீயோதும் படி" என்று கூறியிருக்கிறது. இது சிகரத்தை முதலாகவுடைய சூக்கும பஞ்சாக்கரம். நகரமகரமின்றி மற்ற மூன்று எழுத்துக் கள் சேர்ந்தது அதிசூக்கும பஞ்சாக்கரமாகும். இதனை முத்தி பஞ்சாக்கரமென்பர். இவை பாசத்தை நீக்கி உயிர், ஞானக் கண்ணுல் சிவனை நாடுவதே முத்தி ஐந்தெழுத்தின் தத்துவ மாகும். இவை நடராசர் திருமேனியெனக் கூறப்படும். ஐந் தெழுத்தே திருமேனியாக அவர் கூத்தாடுகிருர். இவைகளை குரு உபதேசமூலம் அறிந்து முறையாகத் தவருது ஓதிவருவோ மானுல் முத்திப் பேற்றை யடையலாம்.

அம்பலவாணரின் திருக்கூத்து திருவைந்தெழுத்தைத் திருமேனியாகக் கொண்டுள்ளது. இதனை உண்மை விளக்கம் அருளிச் செய்த மனவாசகம் கடந்தார்,

ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

என்றருளியுள்ளார். திருவடியிலே நகரமாகவும் திருவுந்தியிலே மகரமாகவும், திருத்தோளிலே சிகரமாகவும், திருமுகத்திலே வகரமாகவும், திருமுடியிலே யகரமாகவும் அமைந்துள்ளன. இத்

திருவுருவத்தை மனத்தில் நினைத்தாலே திருவைந்தெழுத்தை எண்ணியது போலாகும். ஆகவே இத்திருவுருவை மனதில் கொண்டு வழிபட்டுவருதல் வேண்டும். இன்னும் நடராசப் பெருமான் திருக்கூத்து பஞ்சகிருத்தியத்தைக் கூறும் முறையிலே அமைந்துள்ளதென்றும் கூறுவர். இதனை,

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

என்று உண்மைவிளக்கத்தில் பேசப்படுகிறது. நமக்காக இறைவன் செய்கின்ற தொழில் ஐந்தாகும். அவை படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்பதாகும். நாதம் முதல் தோற்றம் உண்டாகிறது. இதனைத் தமருகம் ஏந்திய கை தெரிவிக்கிறது. உலகிலுள்ள உயிர்கள் அச்சம் நீங்கி பாதுகாத்தலை அமைந்த திருக்கை உணர்த்துகிறது. உயிர்களுக்கு மலம் அழிந்தாலல்லாமல் வீடுபேறு கிடையாது. அதனை அக்கினி ஏந்திய திருக்கை நமக்குத் தெரிவிக்கிறது. உயிர்களுக்கு மறைப்பு நீங்கினாலன்றி உண்மை தெரியாது. அதனை ஊன்றிய திருப்பாதம் உணர்த்துகிறது. ஞான ஆனந்தமே உயிர்கள் அடையும் முடிந்தபேறு. இதனைத் தூக்கிய திருவடி உணர்த்தும். ஆகவே உயிர்கள் அனைத்தும் இத்தூக்கிய திருவடியிலே வந்து பேரானந்தப் பெருவாழ்வு அடைய வாருங்கள் என்று அழைப்பது போல ஒரு கரம் அமைந்துள்ளது.

இனி இக்கூத்து முறையைப்பற்றி உண்மை விளக்கத்தில்,

மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள்தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான்.

இக்கூத்து தமருகம் ஏந்திய திருக்கையினால் மாயைதனை நீக்கி அக்கினியேந்திய திருக்கையினால் கன்ம மலத்தைச்சுட்டு ஊன்றிய திருவடியினால் ஆணவ மலம் மேலிடாமல் அமிழ்த்தித் தூக்கிய திருவடியினால் ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில்

அழுத்திப் பேரானந்தப் பெருவாழ்வு தருவதற்காகத்தான் அம்பலவர் ஆனந்தக் கூத்து செய்து கொண்டிருக்கிறார்.

இத்தகைய திருநடனம் செய்து கொண்டிருக்கும்போது "சுரும்ப மருங்குழன் மடவாளாகிய சிவகாமி வல்லியாரை நோக்குகின்ற குறிக்கோள் என்னவெனின் குழந்தைப் பருவத்திலுள்ள உயிர்கள் இந்நடனப்பயனைப் பெறுவதற்குள்ள ஆற்றலில்லாதவை" என அறிந்து சக்தி பாற்காட்டி அவள் வழியாக நமக்கு உணர்த்துகின்றார். இதனைத் "தாயுடன் சென்று தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து ஏயுமதே நிட்டை" என்ற பட்டினத்தடிகள் வாக்காலும், "பாலுண் குழவி பசுங் குடர் பொறாது என நோயுண் மருந்து தாயுண்டாங்கு" என்ற சிதம்பரமும்மணிக்கோவையில் குமரகுருபரசுவாமிகளின் வாக்காலும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய திருநடனத்தின் முறையை ஆன்மாக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இறைவன் சிதம்பரம், திருவாலங்காடு, மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம் முதலிய இடங்களில் முறையே பொற்சபை, ரத்தினசபை, வெள்ளிச்சபை, தாமிரசபை, சித்திரசபை என்ற திருச்சபைகளிலே எழுந்தருளி நாம் அறியும் பொருட்டுத் திருக்கூத்து நிகழ்த்தி வருகின்றார். இவ்விடங்களில் முறையே ஐந்தொழிலின் சிறப்பும் விளங்குகிறதென்பதை அறிந்துகொள்ளலாம். ரத்தின சபையிலே படைத்தலும், பொற்சபையில் காத்தலும் வெள்ளிச் சபையில், அழித்தலும், தாமிர சபையில் மறைத்தலும், சித்திர சபையில் அருளலும் நடைபெறுவதாக இவ்விடங்களின் சிறப்பினை வைத்துக் கூறுவர். பொற் சபையில் பொதுவாக ஐந்தொழிலும் நடைபெறுகிறது என்பார்கள். அக்கூத்து நிகழ்த்தும் நடராசப் பெருமானின் திருக்கூத்தைக் காணவே மானிடராய்ப் பிறந்திருக்கிறோம். எய்தற்கரிய இப்பிறவியிலே வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை வணங்கி மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோயாகிய பிறவி நோயைத் தீர்த்தருள வல்லாளனாகிய பெருமானின் சேவடியிலே சேர்ந்து பிறவிக்கடலை நீந்திப் பேரானந்தப் பெருவாழ்வு அடைய முயலுவோமாக.

சமய நூல்கள்

திரு. சிவகுமாரன் M. A., அவர்கள்,

மின்சார விளக்கு வசதி ஏற்படுவதற்கு முன்பு மக்கள் கூடுமான வரை பகற் பொழுதில் எழுத்து வேலைகளை முடித்துக் கொள்வார்கள். பகலில் வேறு அலுவல்கள் இருப்பின் இரவில் கணக்கப் பிள்ளை, மேசை, விளக்கெண்ணெய் விளக்கு சகிதமாக அமர்ந்து எழுதுவார்கள். காகிதமும் அச்சுப் புத்தகங்களும் சில காலத்திற்கு முன்னர் ஏற்பட்டவை; அதுவும் எல்லோருக்கும் அவை கிட்டியிருக்க முடியாது. பெரும்பாலோர் ஓலைச் சுவடிகளில் எழுதியும் ஓலைச்சுவடிப் பிரதிகளைப் படித்தும் வந்தனர். சிறு வயதில் மணலில் எழுதிப் பழகிக் கையெழுத்து நன்ருக அமைந்திருந்தது. எனவே ஓலை ஏடுகளில் எழுத்தாணி கொண்டு எழுதுவது ஒரு சிரமமாக இல்லை. இக்காலம் போல் ஆயிரக் கணக்கில் பிரதிகள் அச்சிடமுடியாது. புலவர்கள், பிரபுக்கள் வீடுகளில் ஏட்டுப் பிரதிகள் அருமையாக இருக்கும். ஒருவர் திண்ணையில் அமர்ந்து மங்கலான விளக்கு வெளிச்சத்தில் ஏட்டுப்பிரதியில் மகாபாரதத்தை, இராமாயணத்தை வசனமாயினும் செய்யுளாயினும், தனக்கே அமைந்த ஒரு ராகத்தில் படிப்பார்; மற்றையோர் சூழ்ந்திருந்து கேட்டு மகிழ்வர். இதன் சிரமத்தை "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்ற பழமொழி நன்கு விளக்கும்.

இந்த அரிய ஏட்டுச் சுவடிகளை அடிக்கடி எடுத்துக் கையாண்டாலொழிய வெள்ளெறும்பு அவற்றைச் செல்லரித்து விடும். நமது முன்னேர்கள் ஏட்டுச் சுவடிகளை மஞ்சள் காப்பிட்டும், உளுத்துப்போன ஏடுகளைப் பிரதி பண்ணியும் பின் சந்

மேலே கண்ட கட்டுரை மதருஸ் அகில இந்திய ரேடியோ நிலையத்தார் அவர்களின் அன்பனுமதி பெற்று வெளியிடப்பெற்றது.

ததியார்களுக்குத் தந்துபோனுர்கள். இயல்பாகவே அக்காலத்தில் நாவல்கள், பொழுது போக்கு நூல்கள், வசன நூல்கள் அதிகம் நிலவியதாகத் தெரியவில்லை. இரவிலும் கூட, ஏடுகளைப் புரட்டிப் பார்க்காமலே ஞாபகத்திலிருந்து சொல்லக்கூடியதாக, எதுகை மோனையோடு, சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாக, யாவும் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டன.

சைவ சமய ஆசாரியர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், இவர்களது இறை யனுபவ வாழ்க்கை, அருள் வாக்குகள் மக்கள் மனதைக் கவர்ந்தன. அநேகமாக அவர்களது அருட்பாடல்களை அவ்வப்போது உடனிருந்த அடியார்கள் எழுத்தாணி கொண்டு எழுதிச் செப்பனிட்டு வைத்தார்கள். இந்த அருளாளர்களின் பொற்காலம் தொடங்கியே சைவ வைணவ சமயங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று வளரலாயின. மெய்ப்பொருள் உண்மைகளைத் தோத்திரமாக ஆழ்வார்கள் நாயன்மார்கள் வடித்துக் கொடுக்க அவற்றின் விளக்கமாகச் சாத்திரங்களும் தோத்திரங்களும் எழுதப்பெற்றன. மெய்ஞ்ஞானத்தின் இருகண்களாம் தோத்திரமும், சாத்திரமும், ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்றுப் பாது காக்கப் பட்டன.

ஆதீனங்களின் பணி

மன்னர்களும் மக்களும் சமய வளர்ச்சியை மடாலயங்களிடம் ஒப்புவித்தனர். ஆதின கர்த்தர்கள் சிவராசிதானியின் அருளாட்சியாளர்களாக விளங்கினர். அறிவும், திருவும், அன்பும் பண்பும் வாய்ந்த இப்புண்ணிய சிலர்கள், பல சீடர்களுக்கு ஞானுேபதேசம் செய்ததுமன்றி, சாத்திர, தோத்திரங்களையும் குரு சிஷ்ய பரம்பரையாகப் பாடம் சொல்லி வந்தனர். அதன் காரணமாக ஆதின கர்த்தர்களும் தம்பிரான் சுவாமிகள் பலரும், சாத்திர விளக்கவுரைகளும் பாஷ்யங்களும் எழுதலாயினர். இவ்வாறு திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் காசி மடம் முதலிய ஆதீனங்களில் அரிய சுவடிகள் பலவாய்த்தன.

சமய நூல்களுக்கு, முக்கியமாக அருள் வாக்குகளுக்குப் பொருள் விளக்கம் எழுதுவது அநுசிதம் என்றும், சீலம் இல்லாதவர்கள் சாத்திரங்களைக் கற்கக் கூடாது என்றும் புலவர்கள் கூட எண்ணி வந்தார்கள். திரிசிரபுரம் மகாவித்துவான்

மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணுக்கராகிய, முது பெரும் புலவர் தியாகராசச் செட்டியார் அவர்கள், தன்னைத் திருவாசகத்திற்கு உரை எழுதும்படி வற்புறுத்தி வந்த கனவானேடு காவிரியாற்றுப் பாலத்தின்மீது மாட்டு வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது, மீண்டும் கனவான் உரை எழுத வேண்டினமைக்கு "என் சிறுமை எங்கே, திருவாசகத்தின் பெருமை எங்கே! இன்னெரு முறை இவ்வடாத செயலைச் செய்யுமாறு தொந்திரை செய்தால் இக்காவிரியாற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்று பயமுறுத்தினராம். வைணவர்கள் சைவர்களைக் காட்டிலும் முன்னேற்றம் உடையவர்களாய், ஆண்டாள் திருப்பாவைக்கு நாலாயிரம்படி, ஆருயிரம்படி முதலான வியாக்கியானங்களை எழுதி வைத்தார்கள். பெரியவாச்சான் பிள்ளை போன்ற வியாக்கியான கர்த்தாக்கள் திரு நெறிய தெய்வத் தமிழுக்குச் செய்துள்ள சேவை மகத்தானது. அரிய சுவடிகளாயிருந்த இவ்வியாக்கியானங்கள் பெரும்பாலும் அச்சாகியிருக்கின்றன.

தனிப்பட்டவர் தொண்டு

மகாமகோபாத்தியாய தாட்சிணுத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் தமது இளமையிற் கற்று வாலிபத்தில் பல அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது அன்னம், தண்ணீர் இன்றியும், அல்லும், பகலும் அலைந்து திரிந்து, அரிய சுவடியுள்ள இடங்களைத் தேடிக் கண்டு பிடித்து அவற்றின் அருமை தெரியாத உரிமையாளர்கள் காலிலும் வீழ்ந்து வணங்கிச் சுவடிகளைப் பெற்றுப், பாட பேதங்களையும் பரிசோதித்து, ஐம்பெருங் காப்பியங்கள், சங்க இலக்கியங்கள் முதலானவற்றை ஆதீனங்களின் ஆதரவையும் பெற்று அச்சிட்டருளியமையே, இற்றைய தமிழ் வளர்ச்சிக்கு உற்ற துணையாக அமைந்தது என்பது தமிழுலகம் நன்றியுணர்ச்சியோடு பாராட்ட வேண்டிய உண்மையாகும். ஒருவரே தமது வாழ்நாளில் எவ்வளவுதான் சாதித்துவிட முடியும். ஐயரவர்கள் ஆரம்பித்து வைத்த அரும் பணியை அதிருஷ்டவசமாக ஆதீனங்களும், பல்கலைக் கழகங்களும், கடந்த சில ஆண்டுகளாக மீண்டும் துவக்கி, அரிய சமய நூல்கள் பலவற்றைச் செம்மையாக அச்சிட்டு வரு

கிறுர்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் இந் நூற்ருண்டின் ஆரம்பத்திலும் முதன் முறையாக அச்சிடப்பட்ட அனேக அரிய சமய நூல்கள் மறுமுறை அச்சாகாமல், பிரதி களும் கிடைக்காமல் மறைந்து வருகின்றன. இவற்றை ஒழுங்கு செய்து திரும்பவும் அச்சிட்டால் மிக்க உபகாரமாக இருக்கும்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பெருமான் எழுதிய அரிய நூல்கள் பல இன்று கிடைக்கவில்லை. ஆதினங்களில் தத்துவ விளக்கங்களாகவும், வழிபாட்டுக் கிரமங்களாகவும் எழுதப்பட்ட பல அரிய சுவடிகள் இன்னும் அச்சு வாகனம் ஏருமல் இருக் கின்றன.

சுவடிகள் பராமரிப்பு

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் ஸ்ரீ சரபேந் திர மாமன்னர் அவர்களால் அருமை தெரிந்து சேகரித்து வைக்கப்பட்ட சாத்திர, வைத்திய, கலைச் சுவடிகள் பலவும் இது வரை அச்சுக்கு வராமல் இருக்கின்றன. ஸ்ரீ அப்பைய தீட்சிதர் அவர்கள் சைவ சித்தாந்த பரமாக எழுதிய சிவத்தியானமாலை என்னும் வடமொழிச் சுவடியும், மதுரைச் சிவப்பிரகாசரால் மேற் கோளாகக் காட்டப் பெறும் திருநெறி விளக்கம் என்னும் சுவடி யும், ஞானசாரம் என்னும் சைவசித்தாந்தச் சுவடி ஒன்றும், மகா பாரதத்தில் சிவத்தோத்திரமாக வரும் சஹஸ்ரநாமத் திற்கு ஒரு பாடியமும், இன்னும் பலப்பல அரிய சுவடிகளும் சரசுவதி மகாலில் இருக்கின்றன.

அடிக்கடி மேற்கோளாக எடுத்து ஆளப்படும் தத்துவ ரத்னுகரம் என்ற திருமந்திர விளக்கவுரைச் செய்யுள் நூற்சுவடி யொன்று அடையாறு டாக்டர் சுவாமிநாத ஐயர் நூல் நிலையத் தில் இருக்கிறதாகத் தெரிகிறது. இதுவும் இதுவரை அச்சாக வில்லை. தத்துவராயர் என்ற புலவர் 14-ம் நூற்ருண்டில் தொகுத்த பெருந்திரட்டு என்னும் நூலில் 136 நூல்கள் குறிக்கப் படுகின்றன. இதில் 107 நூல்கள் கிடைக்கவில்லை.

இன்னும் சமய சம்பந்தமான அந்தாதி கலம்பகம் முதலிய அரிய செய்யுள் வகை நூல்கள் சுவடி வடிவில் எத்துணையோ இருக்கின்றன. திருவிளையாடற் புராணக் கீர்த்தனைகள் போன்ற அரிய சுவடிகள் வேறு சில அச்சுக்கு வராதிருக்கின்றனவாம்.

மெய்ச் சோதியும் கச்சோதமும்

திரு. வை. சோமசுந்தர முதலியார் அவர்கள்;
கண்டாச்சிபுரம் போஸ்ட்
திருக்கோவிலூர் தாலுகா.

எப்போ தகத்தும் நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

சூரபதுமனுல் தேவர்களுக்கு ஏற்பட்ட சிறையை மீட்கும் பொருட்டுச் சிவ பெருமானுல் முருகப் பெருமான் அனுப்பப் பெறுகின்ருர். முருகன், நவவீரர், இலட்சர், பூதப்படைகள் புடைசூழத் திருச்செந்திலம்பதியை அடைகின்ருர். அங்கிருந்து சூரபதுமனின் உள்ளக்கிடக்கையை அறிய நவவீரரில் முதல்வரான "வீரவாகு தேவரை"த் தூதாக அனுப்புகின்ருர் வீரமகேந்திரத்திற்கு.

முருகனிடம் விடைபெற்ற வீரவாகு தேவர் கந்த மாதனம் அடைந்து, அங்கிருந்து கடல் பாய்ந்து இலங்கையின் வடபால் அங்கு தன்னை எதிர்த்த யாளிமுகன், வீரசிங்கன் என்கின்ற அசுர வீரர்களைக்கொன்று இலங்கையை அழித்து மகேந்திரம் செல்கின்ருர். அங்கு கயமுகனைக் கொல்கின்ருர்.

வீரமகேந்திரத்தில் தேவர்களும் தேவகுமாரன் சயந்தனும் சூரபதுமனுல் சிறையில் அடைக்கப்பட்டு அளவு கடந்த துன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். அந்த இடத்தை வீரவாகு தேவர் அடைந்து அவர்களைக் காண்கின்ருர். சஞ்சலப்பட்டுக் கொண்டு இருக்கும் அவர்களைப் பார்த்து "எமதிறைவனுகிய சண்முகப் பெருமான் என்னையும், இலட்சத்து எண்மரையும், பூதப்படைகளையும் கூட்டிக் கொண்டு நாளைக்கே இப்பட்டினத்தை அடைந்து பத்து தினங்களுக்குள்ளாக சூரபது

மனையும், அவுணவீரர்களையும், சேனை சைன்யங்களையும் மடக்கிக் கொண்டு மகாயுத்தங்களைச் செய்து சின்னா பின்னப்பட அவர் களை இரணக் களத்தில் மாய்த்து உங்களை இச்சிறையினின்றும் விடுதலை செய்து பொன்னுலகத்திற்கு அனுப்புவார்'' நீங்கள் கவலைப்பட வேண்டாம் எனக்கூறித் தேற்றுகின்றார்.

''ஈரிரண்டிரு மூன்றும் இரும்பகலிடையே எங்கோன்
ஆரிருஞ் சமரமுட்டி அவுணர்தம் மனிகந் தன்னைச்
சூரோடு முடித்து நும்மைத் துயர்சிறை தொடர்ச்சி நீக்கிப்
பேரிருஞ் சிறப்பு நல்கும் பிறவொன்றும் நினையல் மன்னோ''

இவ்வாறு தேவர்களுக்குத் தேறுதல் கூறிவிட்டு சூட்சும வடிவம் தாங்கிச் சூரபதுமனின் அவைக்குச் செல்கின்றார்.

கோட்டையின் எல்லையைச் சுற்றிப் பெரிய அகழிகள் பல இருக்கின்றன. அதன் உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் பல்லா யிரக்காணக்கான வீரர்கள் கண் இமைக்காது கையில் வாளேந்தி காவல் புரிகின்றனர். அடுத்திருக்கும் மதிலைச்சுற்றி இரத, கச துரக, பதாதிகள் சர்வாயுத பாணிகளாய்க் காவல் புரிகின்றனர். ஆகாயத்தை எட்டிப்பிடிக்கும் அளவில் கொடிகள் பறக்கின்றன. மதிலின் அருகில் மதிலின் நாற்புறங்களிலும் உள்ள கோபுரங் களோ சூரபதுமன் பொன்னாடு செல்ல நாட்டி வைத்திருக்கும் பொன் ஏணிகளோ என வியக்கும் அளவில் இருக்கின்றன. இவ்வளவையும் காண்கின்றார் வீரவாகு. விசுவருபத்தால் மதி லைக் கடந்து சூரபதுமனின் கொலு மண்டபத்தை அடைகின்றார்.

அங்கே அவர் கண்ட காட்சி:— நவரத்தின மயமாகிய சிங்காதனத்தில் சூரபதுமன் அமர்ந்து இருக்கின்றான். அமர மாதர்களும் அசுர மாதர்களும் தங்கள் கைகளில் உள்ள வளை யல்கள் சப்திக்க ஆலவட்டங்களையும், வெண்சாமரைகளையும் வீசுகின்றனர். அரம்பை, திலோத்தமை, ஊர்வசி, மேனகை போன்ற நடன மாதர்கள் நடனம் செய்கின்றனர். சூரிய சந்திரர் பூச்சக்கரக் குடையைத்தாங்கி நிற்கின்றனர். மின்னலை யொத்த பிரகாசம் பொருந்திய வெள்ளிய வாளேந்தி நிற்கின்றனர் வீரர் பலர். மந்திரிகளும், சாரணர்களும், சேனைத் தலைவர்களும்,

தண்ட நாயகர்களும் அரசனின் கட்டளையை எதிர்பார்த்த வண்ணம் நிற்கின்றனர். இசைவல்லோர் வீணை, தம்புரா போன்ற இசைக்கருவிகளைக் கொண்டு இசை எழுப்புகின்றனர். சபையில் கட்டியங்காரர்கள் பொற்பிரம்பு கொண்டு அனைவரையும் எச்சரிக்கை செய்கின்றனர். சிற்றரசர்கள் அனைவரும் அரசனை வணக்கம் செய்து ஒரு புறம் நிற்கின்றனர். சூரியனைச் சிறை செய்த பானுகோபன், அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு மற்றும் மூவாயிரம் குமாரர்களும் ஆகாயத்தினின்றும் இறங்கி வந்த நட்சத்திரங்களோவென எண்ணும் அளவில் தத்தம் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர்.

பால சூரியனைப் போன்று பிரகாசிக்கும் நவரத்தின கிரீடமானது சூரபதுமனின் சிரசில் ஜொலிக்கின்றது. காதுகளில் வயிர குண்டலங்கள் மின்னுகின்றன. (திரு) வெண்ணீறு அணிந்துள்ள நெற்றியானது சோடச கலையையுடைய சந்திரனையொத்துள்ளது. கைகளில் கடகங்களும், விரல்களில் மோதிரங்களும் மின்னுகின்றன. கால்களில் வீரத்தண்டைகள் சப்திக்கின்றன.

இவைகள் அனைத்தையும் கண்ட வீரவாகு தேவர் என்னே இவனது அரசாட்சியின் திறமை. இவை மட்டுமா? சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழிலையும் புரியும் பரமனிடத்தில் ஆயிரத் தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு சதுர் யுகம் அரசாளவும்; நினைத்த நேரத்தில் நினைத்த இடம் செல்ல இந்திர ஞாலத் தேரையும், பாசுபதப் படையையும்; வானவர்களையும், மானிடர்களையும், ஏனையவர்களையும் ஏவல் கொள்ளும் சாமர்த்தியமும்; பதினாயிரம் கோடி அசுரசேனையும் பெற்றவனல்லவா என எண்ணுகின்றார். வியக்கின்றார். சிந்தனை ஓடத்தில் பவனி வருகின்றது மனம்.

பல்லாயிரம் வருடங்கள் யாக குண்டத்தின் மத்தியிலிருக்கும் கம்பத்தின் உச்சியில் ஒற்றைக் காலில் தவமிருந்தும், தேகத்தை அறுத்து யாககுண்டத்தில் போட்டு ஆகுதி கொடுத்தும்; வைரஊசியில் பெருவிரலையூன்றிக் கடுந்தவம், புரிந்தும் பரமன்

வராததால் குண்டத்தில் பாய்ந்து இறக்க; பிறகு தன் தம்பியின் தவத்திற்கு இரக்கம் கொண்ட பரமனின் கிருபையால் உயிர் பெற்று எழுந்து கஷ்டப்பட்டுப் பெற்ற வரத்தினுல் கிடைத்த இந்த சாம்ராச்சியத்தையும், செல்வங்களேயும் சுக போகங்களே யும் நல்ல முறையில் அனுபவித்துச் செங்கோலேச் செலுத்திச் சுக சீவியாக வாழ்ந்திருக்க நினைக்காமல் வீணே நாசமடையக் கூடிய முயற்சிகளேச் செய்கின்ருனே. ஐயோ! என்னே இவனது ஊழ்வலி! என நினைக்கின்ருர்.

தன்னே வணங்கித் தனக்குக் குற்றேவல் செய்த தேவ இந்திரனை தகாத கட்டளேகளே (கடலில் மச்சங்களேப் பிடித்துக் கொணர்தல், கள்குடம் முதலியன கொண்டு வருதல்) இட்ட தாலும்; இந்திராணியை அபகரிக்க முயன்றதாலும் அன்ருே அவர்கள் ஒடி ஒளிந்து கொண்டனர். அதற்காகச் சயந்தனேயும், தேவர்களேயும் வெஞ்சிறையில் வைத்திருக்கும் சூரபதுமனின் நிலே எப்படி இருக்கிறதென எண்ணுகின்ருர். அதனே நினைக்க நினைக்க அவனுடைய அறியாமைக்காக மனம் இறங்கு கின்ருர்.

ஒரு தூக்கணங் குருவியானது மிகவும் கஷ்டப்பட்டுக் கூடு கட்டியது. அதில் தான் படுக்கவும், தன் குஞ்சுகள் இருக்கவும் வசதியாக அறைகளே அமைத்திருந்தது. அந்தக் குருவியானது தன் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டும்போது வெளிச்சம் இருப்ப தற்காகக் காட்டில் எரிந்து தீ அணைந்து போன (நெருப்பு அணை யாமல் இருந்த) சிறிய கொள்ளிக் கட்டையை மின்மினிப் பூச்சி (கச்சோதம்) என எண்ணி எடுத்து வந்து தன் கூட்டில் வைத்தது. உடனே தீப் பிடித்துத் தானும் தன் குஞ்சுகளும் அந்தக் கூட்டோடு அழிந்து விட்டன.

அதைப்போலத் தேவர்களேச் சிறை வைத்த காரணத்தால் தானும் தன் வரத்தால் பெற்ற சுகபோக ராச்சிய செல்வங்களும் துணைவர்களும் பந்து மித்திரர்களும் வீணே அழிவர். இதில் சிறிதேனும் சந்தேகமில்லே என எண்ணுகின்ருர்.

மெய்ச்சோதிதங்கு சிறுகொள்ளி தன்னைவிறகின்மை
கொண்ட குருகாற்
கச்சோத மென்று கருதிக் குடம்பை தனிநுய்ந்து
மாண்ட கதைபோல்
அச்சோ வெனப்பல் இமையோரை ஈண்டுசிறை
வைத்தபாவம் அதனுல்
இச்சூர பன்மன் முடிவெய்தும் நாளை
இதனுக்கோர் ஐயமில்லையே.

★ குகனை மறவா திரு ★

இராகம்: ஆந்தோளிகா: தாளம்: ஆதி

பல்லவி

மறவாதிரு மனமே குகனை
மன்றம் ஆடிடும் மகிபன் மகனை (மறவா)

அனுபல்லவி

பிறவா வரம் அடியேனுக்கினி
தரவேணு மென்று துதிசெய் தினமே (மறவா)

சரணம்

அண்ட சராசரம் எதிலும் நிறைந்து
அனைத்துயிரினும் அணுவாய் அமர்ந்து
விண்ணோர்புகழ் வேதம்ஒலியாய்த் திகழ்ந்து
விளங்கிடும் ஈசன் பாலனைப் புகழ்ந்து (மறவா)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணூர்பேட்டை, திருநெல்வேலி-3.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

அறிவிப்பு

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் அருளிப்பாட்டின் வண்ணம், கார்த்திகைத் திங்கள் "குமரகுருபரன்" இதழில் வெளிவந்த நீதி நெறிவிளக்கப் பொழிப்புரையின் ஆங்கில மொழி பெயர்ப்பு இம் மாத இதழில் தனியாக வெளியிடப் பெறுகின்றது.

தைத் திங்களில் வெளிவரும் குமரகுருபரன் ஆண்டுமலர் தொடங்கி நீதிநெறி விளக்கம் தமிழ்ப் பொழிப்புரையுடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் அடுத் தடுத்து ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பெறும், என்பதைச் சந்தா நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடிய விரைவில் "திருவுந்தியார்" பொழிப் புரைக்கும் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியிடும் எண்ணமும் உண்டு என்பதை மகிழ்வுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

T. M. குமரகுருபரன் பிள்ளை,
நிர்வாக ஆசிரியர்.

நீதிநெறி விளக்கம்

உரைநடையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்*

குறிப்பு :- சென்ற கார்த்திகை மாத இதழில் வெளி வந்த நீதிநெறி விளக்கப் பாடல்களின் உரைநடைப் பகுதிக்குரிய ஆங்கில மொழிபெயர்ப்பு :

1. Invocation to God

Oh! My kinsmen! Youth is as transient as a bubble on water; riches which we amass in full abundance will come and go in quick succession like the long waves that roll on the sea; and our body lasts no longer than the letters traced on water; why then, do you not worship and sing the praise of our Lord, dancing in the Golden Hall?

2. The virtue of learning

It will bestow virtue, riches and pleasure in this life and heavenly bliss in the next; it will establish a good name abroad; and when any great affliction befalls, it will lend a helping hand by showing the way to get over it. Hence there is no better support than learning to the shortlived human soul.

3. The pleasure of learning

Learning which destroys ignorance and widens knowledge, is at first painful to acquire; but affords great and lasting pleasure afterwards. The misery caused by immoderate sensual indulgence is unbearably greater than the shortlived pleasure it gives at first. Oh! Thou, adorned with perfect jewels, know for thyself, the good of the two.

---

* Translated by: Sri P. Mutharasu M.A., B.T., Lecturer in Tamil, Sri. K.G.S. ArtsCollege, Arulnandi Nagar, Srivaikuntam.

4. The wealth of learning

Learning is the chaste wife, sweet poetry is the darling son thereof andf luency of expression is the ever increasing wealth. Some are also blessed with the rare fortune of adorning the illustrious assembly of the learned.

5. Insight and eloquence

Learning, however extensive it may be, will be of no avail if it lacks the power of insight to discern new ideas at the proper place and time. Even then of what use will it be without lucidity and power of expression? When both are combined in one, it is the flower of gold gifted with fragrance.

6. Of things that had better not be

The learning of those who shudder with diffidence before the assembly of the learned, the empty boast of the illiterate with no fear for the assembly, the wealth of those who neither willingly give it to others nor enjoy it themselves for fear of poverty, and the blooming charm of the poor are things whose non-existence will be better than their existence.

7. In praise of Poetic Creations

Though Saraswathy dwells in Brahma's face he cannot stand in comparison with the gifted Tamil Poets; for the famous works which these poets create, never perish like the empty bodies which Brahma creates.

8. Of learning undependable in nature

The learning acquired after long study but found failing in time of need before an assembly of the learned, is to be dreaded worse than the wife seen in broad daylight, in another's company. While we can get rid of the wife as unworthy, we cannot cast off such

learning, as the knowledge that a person gains in one birth tracks him continuously for seven births.

9. On preservation of learning

The attempt of some to learn more without safeguarding by diligent study and reflection, the learning which has alredy been acquired after arduous enterprise, is like throwing away the abundant wealth on hand and engaging in a wearisome sifting of the dust in search of treasure.

10. The inconspicuos learning of the poor

However great may be the intellectual attainments of the poor, they will never be appreciated even so much as the tiny grain of millet (தினை); as, the righteous deeds of a house holder whose wife is devoid of domestic virtues, are entirely inconspicuous.

11. The world after the wealthy

If a man, sweet in speech and humble in behaviour has no wealth, the world surrounded by the sea, will never open its mouth to him except in harsh words. However rude and tyrannical the moneyed man may be in his speech and action, the world will seek shelter under his feet. Hence the world cannot be said to possess anything other than madness.

12. Of the learned going behind the niggardly

Even knowing the rich to be niggardly, men do menial service importuning them with suits for redress. Is it not the fruit of learning that those who failed to perform good deeds during former births must be at the beck and call of those who did them previously; as such it may not be proper to call it ignorance. (It is the decree of destiny).

13. The learning—an ornament

The learned need no other ornament as the brilliance of their learning is itself an ornament. They are not in need of any other jewel. No one will want to adorn further, a perfect ornament set with finest gems. Who would strive in vain to beautify what is already beautiful?

14. The pride of learning

There is no one in the world, who knows everything. Exult not in the idea that your learning is universal. Oh! thou, wearing massive ear-rings! the hard rock that yields not to the big hammer of the forge, will give way to the hit of the small chisel. (ie. You may be checkmated even by an inferior).

15. On hankering after more learning

For wealth, look at the less fortunate, and rejoice in the greatness of your possessions. As regards learning, look up to your superiors and feel humbled by a sense of comparative inferiority of your intellectual equipment.

16. On humility

The wealth which consists in the possession of learning, and the possession of riches, may be termed wealth indeed, if its possessors bow their heads with humility as the destitute who stand begging before them.

(To be Continued)

பழம் விழுங்கி

புலவர். திரு. சு அருளழகன் அவர்கள்.

தலைப்பைக் காணும் போதே வியப்பாக இருக்கிறதல்லவா! ஆம். பழம் உண்ணாதவர்களே உலகத்தில் இல்லையென்று கூடச் சொல்லலாம். பழம் மிகவும் சுவையானது; உண்டலும் எளிது. மண்ணைத் தின்னும் குழந்தைகளுக்கு நாடோறும் பழங்களைத் தின்னக் கொடுத்து வருவோமானால் அக்குழந்தைகள் மண்ணையே மறந்து விடுகின்றன என்றால் பழத்தின் மாண்பை என்னவென்று சொல்வது! இது கருதியே போலும் விருந்துகளிலும் முக்கனிகளைப் படைக்கிறார்கள்.

பழங்களிலே எத்தனை வகைகள் உள்ளன? சுவைகளும் கணக்கிலடங்கா. நிறங்களையும் பெயர்களையும் நிரல்படக் கூறவும் ஒல்லுமோ? பழங்களில் சில இறைவன் பெயர்களையே பெற்றுள்ளன. முகுந்தம் பழம் என்பது முகுந்தனாகிய திருமாலைக் குறிக்கின்றது போலும். (மொந்தம் பழம் என்பது உலக வழக்கு) பேயன் பழம் என்பது பிறை சூடிய பெம்மானாகிய சிவபெருமானைக் குறிக்கின்றது போலும். பூவன் பழம் என்பது பூவிலே வீற்றிருக்கும் நான்முகனைக் குறிக்கின்றது போலும். அன்புருவாம் ஆண்டவனுக்கு நம் அன்பின் மிகுதியால் படைக்கப்படும் பழங்கள் அத்தனையும் ஏற்றுக் கொள்ளும்படி ஆக்கி விட்டோம்.

முல்லையூரிலே பரந்தாமன் என்ற பெயரையுடையவன் வாழ்ந்து வந்தான். இவனுக்கு நிறைய நிலபுலங்கள் உண்டு. ஊரிலேயே மிகுந்த செல்வன். இவனுடைய பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட எண்ணினான். சிறந்த விருந்தொன்று நடத்தவும் ஏற்பாடு செய்தான். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள்

எல்லோரும் விருந்திலே கலந்து கொண்டார்கள். அவ்விருந் திலே வரதன் என்பவனும் கலந்து கொண்டான். விருந்து முக்கனிகளுடன் நடந்தது. விருந்திலே வாழைப் பழங்களைப் பரிமாறினார்கள். வாழைப் பழத்தைக் கண்டிராத வரதன் பழத் தைக் கண்டவுடன் எடுத்து ஒரே தடவையில் வாயில் போட்டு விழுங்கத் தொடங்கினான். விழுங்க முடியாமலும் மெல்ல முடியாமலும் திணறினான். பந்தியிலே பக்கத்தில் உட்கார்ந் திருந்த பெரியவர் "பார்த்து விழுங்கு, பார்த்து விழுங்கு" என்று கூச்சலிட்டார். பந்தியிலிருந்த எல்லோரும் வரதனையே பார்த் தார்கள். சிலர் வரதனைப் பார்த்து "பழம் விழுங்கி" என்றும் அழைத்தார்கள். ஊரிலிலுள்ள எல்லோரும் வரதனைப் பழம் விழுங்கி என்றே அழைத்தார்கள்.

அவ்வூரில் அவ்வாண்டிலேயே மாரியம்மன் திருவிழா நடந்தது. விழாவின் மூன்றும் நாள் முத்து மாரியம்மனின் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. அம்மன் தேரின் மேல் ஒரு பெரியவர் பழங்களை அள்ளி வீசிக் கொண்டு வந்தார். வரதனு டன் பலர் உரையாடிக் கொண்டிருந்தார்கள். "பழம் விழுங்கி பழம் விழுங்கி" என்று எப்பொழுது பார்த்தாலும் எள்ளி நகை யாடிக் கொண்டிருக்கும் வாணனும் அங்கு இருந்தான். அம்மன் தேரின் மேல் வாழைப்பழம் போடுகிறார்கள் என்ற செய்தி இவர்கள் காதிலே விழுந்தது. இதைக் கேட்ட வாணன் உடனே வாழைப் பழத்தை "உரித்துவிட்டு போடுகிறார்களா? உரிக்காமல் போடுகிறார்களா" என்று கேட்டான். அங்கிருந்த வரதன் இதுதான் சமயம் என்று வாணனை வாழைப் பழச் சோம்பேறி என்று பலர் முன்னிலையிலும் அழைத்தான் அப்பொழுதிருந்து எல்லோரும் வாழைப் பழச்சோம்பேறி என்றே அழைத்தார்கள்.

உலக வழக்கிலுள்ள கதைகளைப் பார்த்தோம். புராணத் திலே பழத்தைப் பற்றி எழுந்துள்ள கதையையும் காண்போம். கயிலைக் கண்ணுதல் தன் மனைவியுடன் வீற்றிருந்தார். அவருக்கு ஒரு மாம்பழம் கிடைத்தது. பழமோ ஒன்று; மக்களோ இருவர். சிந்தித்த சிவபெருமான் இருவரையும் அழைத்தார். முன்னவ னும், முருகவேளும் ஓடி வந்தார்கள். இருவரையும் பார்த்துக்

கையில் உள்ள மாங்கனியைக் காட்டி, "உலகத்தை ஒருமுறை யார் முதலில் சுற்றி வருகிருர்களோ, அவர்களுக்கு இந்த மாங்கனி உரியது" என்ருர். உடனே அறிவுக் கண்ணுகிய முருகன் தன் மயிலூர்தி மீது உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டு விட்டார். யானை முகத்தனுர் சிந்தித்துப் பார்த்தார். சிந்தனைக்கு நல்ல விருந்து கிடைத்தது. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலைபெறுத்தலும் நீங்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடைய அண்ணலாகிய" அம்மையப்பரே உலகம் என்று எண்ணினுர். தம் தாய் தந்தையரையே ஒரு முறை உலகம் என்று எண்ணிச் சுற்றி வந்தார். கனியைக் கேட்டார்; கயிலைக் கண்ணுதல் கனியைக் கரிமுகனின் கையில் கொடுத்து அறிவைப் பாராட்டி மகிழ்ந்தார். முருகவேள் உலகத்தை விரை வாகச் சுற்றிவிட்டு ஓடோடி வந்தார். கயிலைக் கண்ணுதலைப் பார்த்துச் கனியைக் கேட்டார். உனக்கு முன்பே உன் அண்ணன் உலகத்தைச் சுற்றி வந்து விட்டான்; அவனுக்குக் கனியை கொடுத்து விட்டேன். அதோ! அவனும் அமுதம் போன்ற கனியைக் கையில் கொண்டிருக்கிருன்; என்று கூறினுர். உடனே முருகன் அண்ணுல் அவ்வளவு சீக்கிரத்தில் உலகத்தைச் சுற்றி வர முடியாதே; நான் தான் சுற்றி வந்தேன் எனக்கு கொடுக்கா மல் ஏமாற்றி விட்டீர்கள் என்று அழுது புலம்பினுராம். பாரி லுள்ள உயிர்களுக்கெல்லாம் பால் நினைந்தூட்டும் பரமன் முருகனைப் பார்த்து, கண்ணே! முருகா, வருந்தற்க பழம் நீ என்று கூறினுராம். உனக்கு ஆறுபடை வீடுகளில் ஒன்ருகிய திருவாவினன் குடியிலே அன்பர்கள் பழ அமிழ்து கொண்டு வழிபடுவார்கள்; பழ அமிழ்தத்தாலேயே திருமுழுக்காட்டு வார்கள்; கவலற்க; என்றனராம்.

இது போன்ற செய்திகளையெல்லாம் பழத்தின் மீது ஏற்றிப் போற்றுகிருே மென்ருல் பழத்தின் மாண்பை என்னென்று சொல்வது. வடலூர் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் சிவபெருமானை வாழைப் பழம் விழுங்கி என்று அழைக் கின்ருர். வாழைப் பழத்தையே விழுங்குகிருரா? வாழைப் பழம் போன்றவர்களை விழுங்குகிருரா? வாழைப் பழம் போன்றவர் யார்? என்று பார்ப்போம். அவா அற்றவர்கள், முத்தர் எனப்

படுவோர் வாழைப் பழம் போன்றவர்கள். பழமும் தோலும் பற்றற்று இருப்பது போல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்கின்றார்கள். பற்றற்றானையே நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து வாழும் பக்தர்களை வள்ளலார் வாழைப் பழத்துடன் ஒப்பிடுகிறார். பற்றற்றானை வணங்கும் பரம ஏழைகள் கூட பழம் இல்லாமல் வழிபடுவதில்லை. "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" என்பதல்லவா தொல்காப்பியம். பற்றற்ற முத்தர்களைக் காட்டிலும் வாலறிவனை வழிபடுதற்குரிய பொருளானதினால் உயர்ந்தது ஆனது போலும். பற்றற்ற முத்தர்களை யெல்லாம் தன் திருவடி நிழலிலே சேர்த்து வானோர்க்கும் உயர்ந்த உலகத்தைச் சிவபெருமான் தருகிறார் என்பதைக் கூற வந்த வள்ளலார் பெருமான் "பற்றறியா முத்தர் தமை யெல்லாம் வாழைப் பழம் போல விழுங்குகின்ற பரமே" என்று தாம் பாடிய மகாதேவ மாலையிலே பாடி மகிழ்கிறார். பாட்டை முழுவதையும் படித்தும் பாடியும் மகிழுங்கள் என்று கூறிப் பாட்டை முழுவதையும் எழுதியுள்ளேன்.

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியாது இன்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றுங்
கற்றறியாப் பேதையேன் தனக்கும் இன்பம்
கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே.

—மகாதேவ மாலை 51-ம் பாடல்.

உ
சிவ சிவ

SRIVAIKUNTAM
SRI KUMARA GURUPARA SWAMIGAL ARTS COLLEGE

SECOND ADDITIONAL ENDOWMENT LANDED PROPERTY

WORTH Rs. 8,00,000/-

DEED of Trust Settlement dated 7th day of November 1962 executed by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal, Head of Sri Kasimutt, Tirupanandal in favour of the Managing Committee. managing the Sri Kumaragurupara Swamigal Arts College, Srivaikuntam, Tirunelveli Dt.

2. The income from the properties endowed by the Donor in favour of the above said College in documents No. 2936 dated 12-10-1960 and No. 1598 dated 17-7-1961 having been found inadequate to meet the recurring expenditure of the above said College, His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal is hereby pleased to create this Second Additional Endowment. The property detailed in the schedule hereunto annexed consisting of 515-39 Acres of Wet and Dry lands in Tiruloki village of Kumbakonam Taluk, Tanjore District in the sole enjoyment of the Donor and with patta standing in his name, has been set apart as capital of this fund.

3. Out of the annual income from the property excluding the usual charges thereon such as Government dues, village and office establishment charges, village Samudayam and maramath expenses etc. a sum of Rs. 15,000/- (Rs. Fifteen thousand only) will be donated annually to the Sri Kumaragurupara Swamigal Arts College, Arulnandinagar, Srivaikuntam. The amount remaining after this donation will be spent at the discretion of the Donor and his successors in interest for similar charitable purposes.

4. The administration of the landed property shall vest with the Donor and his successors in interest. The Donation may vary in accordance with the net income derived each year.

5. The value of the property is Rs. 8,00,000/- and the present estimated annual income from it is Rs. 30,000/-.

Tirupanandal
Dated 7-11-1962. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub - Registrar's office as No. 2468 of 1962 of Book 1 volume 1156 pages 201 to 206 of 8-11-1962

பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13, இதழ் 10-ன் தொடர்ச்சி]

மங்கலச் சொற் பொருத்தம் 8.

புட்பொருத்தத்தின் கண் ஆய்ந்தெடுத்த எழுத்துக்களைக் கொண்டே மங்கலச் சொற்பொருத்தம் அமைத்தல் வேண்டுமாகையான் எட்டாவதாக மங்கலச் சொற்பொருத்தம் கூறலுற்றும்.

(மங்கலச் சொற்கள்)

பொன்பூத் திருமணி புனல்ஆ ரணம்கடல்
செங்கதிர் திகிரி தேர்பரி எழுத்தே
மாநிலம் கங்கை மலைபுகழ் அமுதம்
கார்புயல் உலகம் களிறே அருந்ததி
பார்மதி நாள்சீர் ஞெண்டுடன் என்ன
எண்ணிய சொல்லே அவைஅல் பிறவும்
கண்ணிய மங்கலச் சொல்எனக் காட்டினர்.

—பன்னிரு பாட்டியல்,

(இ - பொ) பொன், பூ, திரு, மணி, புனல், ஆரணம், கடல், கதிர், திகிரி, தேர், பரி, எழுத்து, நிலம், கங்கை, மலை, அமுதம், கார், புயல், உலகம், களிறு, அருந்ததி, பார், மதி, நாள், சீர், ஞெண்டு, என்பனவும், இவைபோன்ற பிறசொற்களும், கண்ணிய மிக்க மங்கலச் சொற்களெனக் காட்டினர் புலவர்.

'அவை அல்பிறவும் கண்ணிய மங்கலச் சொல்' என்று இயம்பியதனுன் மற்றும் பல மங்கலச் சொற்கள் உள்ளன

வெனக்கொள்க. அவற்றைப்பின் வரும் மேற்கோட்சூத்திரங் களான் அறிக.

மேற்கோள்:

சொல்லெனப் படுபவை சொல்லுங்காலைத்
திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா
றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர்
நாள்சொல் ரெண்டு நாட்டிய பரிமலை
கருடன் அருந்ததி மற்றிவை யென்ப
நிலைபெறு மங்கல நெறிநிற் பனவே — பொய்கையர்.

இம்மேற்கோட் சூத்திரத்தான் எழில், கருடன், சொல், ஆறு, மழை, எனும் சொற்களும் மங்கலச் சொற்கள் என்று விளங்கா நின்றன.

இச்சூத்திரத்தின்கண் வந்துள்ள 'யாறு' என்ற சொல்லை முதன்மொழியாய் அமைக்கும் ஞான்று 'ஆறு' என்றே அமைத்தல் வேண்டும் என்னை? யெனின், 'யா' என்பது நச்செழுத்தாக லான் அஃதை முதன்மொழியின் முன்னெழுத்தாய் அமைத்தல் ஆகாது. ஆகையாற்றான் 'ஆறு' என்றே அமைத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது.

'ஆறு' என்ற சொல் மக்கட்கு ஆகாது. கடவுளர்க்கும், முனிவர்க்குமே ஆகும். இதன் விவரம் அடுத்த சூத்திரம் இயம்பும்.

'யா' என்னும் எழுத்தை நச்செழுத்தெனக் கூறிய பாட்டிய லார் ஈண்டு 'ஆறு' என்று கூருது 'யாறு' என்று கூறிய தென்னை? யெனின், காட்டுதும்.

"திருப்பொன் பூமி புனன்மணி கடலா றெழுத்தமுது" எனக்கூறின் ஒசை நயம் குறைகின்றமையான் அஃது நிறை யும் பொருட்டு " திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா றெழுத் தமுது" என்ருர்.

மேற்கோள் :

சீரெழுத்துப் பொன்பூத் திருமணிநீர் திங்கள்சொல்
கார் பரிதி யானை கடலுலகம்—தேர்மலைமா

கங்கை நிலம்பிறவும் காண்டகைய முன்மொழிக்கு
மங்கலமாம் சொல்லின் வகை. —வெண்பாப் பாட்டியல்.

சீர்மணி பரிதியானை திருநிலம் உலகுதிங்கள்
கார்மலை சொல்லெழுத்துக் கங்கைநீர் கடல்பூத் தேர்பொன்
ஏருறு மிவைமூவாறும் இதிற்பரி யாயப் பேரும்
ஆருமங் கலச்சொல்செய்யுள் ஆய்ந்துமுன்வைக்கநன்றாம்.
—சூடாமணி நிகண்டு.

இம்மேற்கோட்கவிதை இரண்டின் கண்ணும் உள்ள 'யானை' எனும் சொல்லை முதன்மொழியின்கண் 'ஆனை' என்றே அமைத்தல் வேண்டும். யானை என அமைக்கின் தீதாம். 'யா' என்பது நச்செழுத்தென்று முன்னரே மொழியப்பட்டது.

ஈண்டு 'ஆனை' என்ற சொல்லை 'யானை' எனக் கூறிய தென்னை? யெனின், இயம்புதும்,

"இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்."

எனும் நன்னூற் சூத்திரவிதிப்படி நிலைமொழியாகிய 'பரிதி' என்னும் சொல்லுடன் வருமொழியாகிய, 'ஆனை' என்னும் சொல் புணரும் ஞான்று யகர உடம்படுமெய் தோன்றிற்றென அறிக.

ஆகையான் அச்சொல்லைப் பாமாலையின் முதன்மொழி யாய் அமைக்கும் ஞான்று 'ஆனை' என்றே அமைத்தல் வேண்டு மெனத் தெளிக. (இச்சொல் கடவுளர்க்கும், முனிவர்க்குமே உரியதாம்)

மேற்கோள்:

மாமணிதேர் புகழமுதம் எழுத்துக் கங்கை
மதிபரிதி களிறுபரி யுலகஞ் சீர்நாள்
பூமலைகார் திருக்கடனீர் பழனம் பார் சொல்
பொன்திகிரி பிறவு முதன் மொழிச்சீர்க்காகும்
....
—சிதம்பரப்பாட்டியல்,

இச்சிதம்பரப் பாட்டியல் அடிகளால் 'பழனம்' என்ற சொல் லும் மங்கலச்சொல் எனக்கொள்க.

ஈண்டியம்பிய மங்கலச் சொற்களையெல்லாம் இருபிரிவாகப் பன்னிருபாட்டியலார் பகர்ந்தனர். மக்கட்கு ஆகும் மங்கலச் சொற்கள் ஒருவகை; மக்கட்கு ஆகாத மங்கலச் சொற்கள் மற்றொரு வகை.

வருமாறு:

(இருவகைமங்கலச்சொற்கள்)

செப்பிய உடம்பொடு சேரா துயிர்முதல்
நிற்பன மக்கட் காமெனின் நேர்ந்திலர்
மற்றவை கடவுளர் முனிவர்க் காமே. —பன்னிரு பாட்டியல்.

(இ-பொ) சொல்லிய மங்கலச் சொற்களின் முன்னர் மெய்யுடன் சேராது உயிர்தனித்து நிற்கின் அச்சொற்களை மக் கட்கு முதன் மொழியாய் அமைத்துப் பாடப் புலவர் உடன்பட்டி லர். அச்சொற்களை (உயிரெழுத்தை முன்னெழுத்தாக உடைய மங்கலச் சொற்களை)க் கடவுளர்க்கும், முனிவர்க்கும் பாமாலை யின் முதன் மொழியாய் வைத்துப் பாடல் ஆம் என்ப.

உயிர் மெய்யெழுத்தை முன்னெழுத்தாக உடைய மங்கலச் சொல்லை முதன்மொழியாய் அமைத்து மக்கட்குப் பாமாலை புனை தல் வேண்டும் என்பது கருத்தாம்.

"உடம்பொடு சேரா துயிர் முதல் நிற்பன மக்கட்காமெனி னின் நேர்திலர்" என்றதனுன் "உடம்பொடு சேர்ந்த உயிர் முதல் நிற்பன மக்கட்காமெனின் நேர்ந்தனர்" எனக் கொள்க.

உயிரெழுத்தை முன்னெழுத்தாக உடைய மங்கலச்சொல்லை முதன்மொழியாய் அமைத்து மக்கட்குப் பாமாலை புனையின் என்னும்? எனின் இயம்புதும்.

அங்ஙனம் அமைத்து மக்கள் மீது பாமாலை புனையின் அவர்கட்கு (பாடப் பட்டோர்க்கு) இழிவும், இறப்பும் உண்டாம். ஆகையாற்றான் "ஆமெனின் நேர்ந்திலர்" எனப்பன்னிருபாட் டியலார் சுருங்கச் சொல்லினர்.

மற்றும், உடலின்றி உயிர்தனித்து வாழ இயலாதாகை யான் உயிரெழுத்தை முன்னெழுத்தாக உடைய மங்கலச் சொல்லும் அஃது ஒப்பாம் எனக் கொண்டார் எனத் தெளிக.

ஈண்டுக் கூறிய கூற்றை எடுத்தியம்பும், இந்திரகாளியச் சூத்திரத்தையும் நோக்குக.

வருமாறு:—

ஓதிய மெய்யொடு புணரா துயிரெழுத்து
ஆதி நிற்பி னுனந் தம்மே. —*இந்திர காளியார்.*

ஈண்டு ஆனந்தம் என்பது குற்றமெனப் பொருள்படும்.
உடம்பு பிரிவுயிர் சாத ருனே. —*இந்திர காளியார்.*

மலர் 13 இதழ் 6-ன் கண்ணும் இக்கருத்து எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

ஈண்டு இயம்பிய காரணங்களால் உயிர்மெய்யெழுத்தை முன்னெழுத்தாகக் கொண்ட மங்கலச் சொல்லையே முதன் மொழியாய் அமைத்து மக்கட்குப் பாமாலை புனைதல் வேண்டு மெனக்கொள்க.

மக்கட்கு ஆகும் மங்கலச் சொற்கள் வருமாறு:- சீர், பொன், திரு, மணி, நீர், சொல், கங்கை, கார், பூ, திங்கள், பரிதி, தேர், என்னும் இவையும், இவை போன்ற (உயிர் மெய் யெழுத்தை முன்னெழுத்தாக உடைய) மங்கலச் சொற்களும் மக்கட்கு ஆம்.

மக்கட்கு ஆகாத மங்கலச் சொற்கள் வருமாறு :—

எழுத்து, உலகம், எழில், ஆனை, ஆறு, அருந்ததி, அமுதம், ஆரணம், என்னும் இவையும், இவைபோன்ற (உயிரை முன்னெழுத்தாக உடைய) மங்கலச் சொற்களும் மக்கட்கு ஆகாவாம்.

கடவுளர்க்கும், முனிவர்க்கும் சாற்றும் பாமாலையின்கண் இருவகை மங்கலச் சொற்களும் முதன் மொழியாய் நிற்கத் தக்கவையேயாம்,

மங்கலச் சொற்களின் பரியாயச் சொற்களும் மங்கலச் சொற்களாம். பரியாயச் சொல் என்பது ஒரு பொருளைக் குறித்த மறு சொல்.

உதாரணம் :

பூ என்பதற்குப் பரியாச் சொல் மலர்.
திங்கள் என்பதற்குப் பரியாயச் சொல் மதி.
உலகம் என்பதற்குப் பரியாயச் சொல் பார்.

ஈண்டு உதாரணம் காட்டிய மங்கலச் சொற்களுக்குப் பரியாயச் சொற்கள் இன்னும் உள. ஏனைய மங்கலச் சொற்களுக்கும் பரியாயச் சொற்களைக் கண்டு கொள்க.

இப்பரியாயச் சொற்களையும் முன்னர் மொழிந்த பொருத் தங்கட்கியைய அமைத்தல் வேண்டும்.

எந்நூல் இயற்றப்புகினும் அந்நூற்கண் மங்கலச் சொல்லை முதன்மொழியாய் அமைத்தல் கடமையாமென அறிக.

நமது குமரகுருபர அடிகளாரும் தாமியற்றிய திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பாவைப் 'பூ' என்னும் மங்கலச் சொல்லால் தொடங்கியுள்ள பெற்றியையும் ஈண்டு நோக்குக.

பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் —கந்தர்கலிவெண்பா.

மங்கலைப் பாடும் முறை :

ஈண்டு மக்கட்கு ஆமென இயம்பிய மங்கலச் சொற்களுள் புட்பொருத்தத்தின் கண் ஆய்ந்தெடுத்த எழுத்தை முதலெழுத் தாக உடைய மங்கலச் சொல்லையே பாட்டுடைத் தலைவன் மீது பாடும் பாமாலையின் முதன்மொழியாய் அமைத்தல் வேண்டும்.

உதாரணம்:

முன்னர்க் கூறிய புட்பொருத்தத்தின்கண் சுப்பிரமணியன் என்னும் பெயராளருக்கு ஆய்ந்தெடுத்த எழுத்துக்கள் வருமாறு:-

சொ. சோ. மெ. மே. என்னும் நான்குமாம். இந்நான் கெழுத்துக்களுள் 'சொ' என்னும் எழுத்தை முதலெழுத்தாக

உடையது 'சொல்' என்னும் மங்கலச் சொல்லாம். ஆகையான் சுப்பிரமணியன் என்னும் பெயராளருக்குச் 'சொல்' என்னும் மங்கலச் சொல்லைப் பாமாலையின் முதன்மொழியாய் அமைத்துப் பாடுக.

திங்களின் பரியாயச் சொற்களுள் 'சோமன்' என்பதும் ஒன்ருகையான் சோமன் என்ற மங்கலச் சொல்லையும் (சுப்பிர மணியன் என்ற பெயராளருக்கு) முதன்மொழியாய் அமைத்தல் பொருந்தும்.

'மெ' என்னும் எழுத்து மங்கலச் சொற்கு முதலெழுத்தாக அமையாமையான் அஃது நீக்கப்பட்டது.

உலகம் என்பதன் பரியாயச் சொற்களுள் மேதினி என் பதும் ஒன்ருகையான் அதனையும் முதன்மொழியாய் அமைத்தல் ஆம் என்ப.

மங்கலச் சொற்களை இருவகைப் படுத்திப் பன்னிரு பாட்டி யல் பகர்வதைப் போன்று வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலிய பிற பாட்டியல் நூற்கள் கூறக் காண் கிலேம்.

காலத்தான் முந்தியதாயும், சங்கத்துச் சான்ருேர் நெறி யைப் பின்பற்றியதாயும் பன்னிரு பாட்டியல் அமைந்திருத் தலினுன் பன்னிரு பாட்டியல் கொள்கையே சாலச் சிறந்ததா மென்ப.

ஆகையான் பன்னிரு பாட்டியல் நெறியையே கருத்துட் கொள்ளல் கடமையாமென அறிக.

மங்கலச் சொல்லை முதன்மொழியாய் அமைக்கும் விதத்தை அடுத்த இதழில் சீரெழுத்துப் பொருத்தத்தின்கண் செப்புவாம்.

(வளரும்)

சேர்க்கை

சென்ற இதழ் (மலர் 13. இதழ் 10) பக்கம் 590 வரி 13-ல் 'நிறைமதிக்கு ஒரு விதமாகவும்' என்றிருப்பதுடன் இருள் மதிக்கு ஒரு விதமாகவும், என இணைத்துக் கொள்க.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9606	Kamaraj 60th Birth day commemoration volume.	By Committee.
9607	திருவள்ளுவநாயனுர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள் மூலமும் ஓர்பழைய உரையும்.	டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம்.
9608	தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினுர்கினியம் விளக்க உரையுடன்.	கு. சுந்தரமூர்த்தி (கழகவெளியிடு).
9609	தொல்காப்பியம் (நச்சினுர்க்கினியம்)	தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையம்.
9610	சோழர் கோயிற் பணிகள்.	J. M. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L.,
9611 to 15	பண்டாரச் சாத்திரம் உபதேசப் பஃறொடை, பஞ்சாக்ரப் பஃறொடை (உரையுடன்).	திருவாவடுதுறை ஆதீனம்.
9616	திருமந்திரக் கட்டுரை 2ம் தந்திரம் (பிற்பகுதி).	ஷ
9617 to 23	திருக்கச்சி அனேக தங்காவதம் திருப்பதிகம்.	தருமபுர ஆதீனம்.
9624 to 28	சிவப்பிரகாசம்-சீர்மைக் கட்டுரைப் பிற்பகுதி.	திருவாவடுதுறை ஆதீனம்
9629 & 30	திருநாவுக்கரசு நாயனுர் அருளிச் செய்த தேவாரத்தில் பதிகங்கள் (5ம் திருமுறை).	தருமபுர ஆதீனம்.